# தின பூமி
thinaboomi.com

பூமி: 33 சுற்று: 277 ஆடி 30 | RNI Regn. No.55306/93 TN/CCN/556/2012-2014

சென்னை, வெள்ளி, ஆகஸ்ட் 15, 2025 | சென்னை | மதுரை | திருச்சி | கோவை | நெல்லை | சேலம் | வேலூர் | புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00




**பாகிஸ்தான் ராணுவத்தில் புதிய படை உருவாக்கம்: பிரதமர் ஷாபாஸ் அறிவிப்பு**


....2-ம் பக்கம்

**காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து: மத்திய அரசு பதிலளிக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவு**

...3-ம் பக்கம்

**சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜூனுக்கு திடீர் நிச்சயதார்த்தம்**

....6-ம் பக்கம்





முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று, தலைமைச்செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டைச்சேர்ந்த கோகி ஹோல்டிங்-ன் துணை நிறுவனமான ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், மஹிந்திரா வோர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள தொழிற் பூங்காவில், மின் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# செங்கல்பட்டில் ரூ.700 கோடியில் மின் கருவிகள் உற்பத்தி ஆலை

## ஜப்பான் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

சென்னை, ஆக. 14-

**ரூ. 700 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 1000-க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கோகி ஹோல்டிங்-ன் துணை நிறுவனமான ஹிகோகி பவர் டூல்ஸ் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், மஹிந்திரா வோர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள தொழிற் பூங்காவில், மின் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் நேற்று (ஆக. 14) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் இலக்கு நிர்ணயித்து, அதனை விரைவில் எய்திடும் வகையில் அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, மத்திய அரசின் 2024-25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஜப்பான் நாட்டைச் சேர்ந்த உலகளாவிய நிறுவனமான கோகி ஹோல்டிங் ஜப்பான், ஜெர்மனி, சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் உற்பத்தி ஆலைகளைக் கொண்டுள்ளது. பெங்களூருவை தலைமையிடமாகக் கொண்டுள்ள அதன் துணை நிறுவனமான ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், 15-க்கும் மேற்பட்ட விற்பனை அலுவலகங்கள், 500க்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் 100-க்கும் மேற்பட்ட சேவை மையங்களுடன் விரிவான வலையமைப்பை கொண்டுள்ளது. ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், மஹிந்திரா வோர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள தொழிற் பூங்காவில், ரூ.700 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் சுமார் 1000-க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், மின் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

# தமிழ்நாடு கவர்னரின் தேநீர் விருந்தை புறக்கணித்தார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, ஆக. 15-

**தமிழக கவர்னரின் தேநீர் விருந்தை முதல்வர் ஸ்டாலின் புறக்கணித்துள்ளார்.**

சுதந்திர தினவிழாவை முன்னிட்டு ஆளுநர் ரவி நாளை ராஜ் பவனில் தேநீர் விருந்து ஏற்பாடு செய்துள்ளார். இதற்கு அரசியல் கட்சி தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்நிலையில் ஆளுநர் ரவியின் தேநீர் விருந்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புறக்கணிப்பதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது. முன்னதாக காங்கிரஸ் உள்ளிட்ட திமுக கட்சிகள் ஏற்கனவே ஆளுநரின் தேநீர் விருந்தை புறக்கணிப்பதாக அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## காலை உணவு முதல் ரூ.10 லட்சம் காப்பீடு வரை:

# தூய்மைப் பணியாளர்கள் நலனுக்காக 6 திட்டங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல்

சென்னை, ஆக. 15-

**காலை உணவு முதல் ரூ.10 லட்சம் காப்பீடு வரை, தூய்மைப் பணியாளர்கள் நலனுக்காக 6 சிற்ப்பு திட்டங்களை தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்கான ஒப்புதலை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் வழங்கப்பட்டது.**

### தொழில் முதலீடுகளை...

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்ற 2021-ம் ஆண்டு முதல் கடந்த 4 ஆண்டுகளில் வெளிநாட்டு பயணம் மேற்கொண்டதன் மூலம் ரூ.10 லட்சம் கோடிக்கும் அதிகமான தொழில் முதலீடுகளை ஈர்த்து வந்து உள்ளார். இதன் மூலம் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கியதில் 30 லட்சம் பேருக்கும் அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த நிலையில் தமிழ்நாட்டுக்கு மேலும் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் மு.க. ஸ்டாலின் வருகிற செப்டம்பர் மாத தொடக்கத்தில் ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செல்கிறார்.

### அமைச்சரவை கூட்டம்...

இதைத் தொடர்ந்து சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் தமிழக அரசின் முக்கிய திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. தமிழ் நாட்டுக்கான புதிய தொழில் முதலீடுகள் குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. அமைச்சரவை கூட்டம் சுமார் 1 மணி நேரத்திற்கும் மேல் நடந்தது. கூட்டம் முடிந்ததும் அமைச்சர் தங்கம் தென்னரசு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

### 6 திட்டங்கள்....

நம்முடைய முதல்வர் இன்றைக்கு (நேற்று) தூய்மைப் பணியாளர்களுக்காக 6 சிறப்புத் திட்டங்களை அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதலுக்கு தந்துள்ளார். தூய்மைப் பணியாளர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த நல வாரியத்தின் திட்டங்கள், நன்மைகள் அது வழங்கக் கூடிய நலன்கள் தூய்மைப் பணியாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்துக்கும் தருவதற்கு இந்த அரசு முனைப்புடன் உள்ளது.

### தமிழக அரசின் அறிவிப்புகள்

1) தூய்மைப் பணியாளர்கள் சிகிச்சை அளிக்க தனித்திட்டம் செயல்படுத்தப்படும்.
2) பணியின் போது மரணம் அடைந்தால்10 லட்சம் ரூபாய் நிவாரணம்.
3) சுய தொழில் தொடங்க ரூ.3.50 லட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.
4) தூய்மை பணியாளர்களின் குழந்தைகளுக்கான புதிய உயர் கல்வி உதவித்தொகை திட்டம்.
5) நகர்ப்புறங்களில் சொந்த வீடு இல்லாத தூய்மைப் பணியாளர்களுக்கு 30,000 புதிய குடியிருப்புகள்.
6) தூய்மை பணியாளர்களுக்கு கூடுதலாக ரூ.5 லட்சம் இலவச காப்பீடு திட்டம் .
7) தூய்மைப்பணியாளர்களுக்கு காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் கட்டணமின்றி வழங்கப்படும்.

### திட்டங்களுக்கு ஒப்புதல்...

நமது முதல்வர் கலைஞர் காலத்தில் இருந்து தூய்மைப் பணியாளர்களுக்கு செய்து வரும் திட்டங்களை தொடர்ந்து கடைபிடித்து வருவதுடன் தூய்மைப் பணியாளர்கள் மட்டுமின்றி அரசு ஊழியர்கள் நலனிலும் முதலமைச்சரின் அரசு பெரும் கருணைக் கொண்டதாக இருக்கிறது. இதைத் தொடர்ந்து நேற்று அமைச்சரவை கூட்டத்தில் தூய்மைப் பணியாளர்களுக்காக 6 சிறப்பு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### கூடுதல் காப்பீடு...

தூய்மைப் பணியாளர்கள் குப்பைகளை கையாளும் போது தோல் நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க தனித் திட்டம் செயல்படுத்தப்படும். தூய்மைப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால் நல வாரியம் மூலம் அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் நிதி உதவியுடன் கூடுதலாக ரூ.5 லட்சம் காப்பீடு வழங்கப்படும். இதன் மூலம் ரூ.10 லட்சம் அவர்களது குடும்பத்திற்கு கிடைக்கும்.

### கல்வி உதவித் தொகை....


தூய்மைப் பணியாளர்கள் சுயத்தொழில் தொடங்கினால் 35 சதவீதம் மானியமாக அதாவது, ரூ.3½ லட்சம் வரை வழங்கப்படும். 6 சதவீத வட்டி மானியத்துடன் வழங்குவதற்கு ஆண்டுக்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகள் உயர்கல்வியில் சேரும் போதும் உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்படும். அவர்கள் எந்தப் பள்ளியில் பயின்றாலும் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்தும் வழங்கும் வகையில் புதிய கல்வி உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்படும்.

### கலைஞர் கனவு இல்லம்....

தூய்மைப் பணியாளர்களுக்கு 3 ஆண்டுகளில் வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் 30 ஆயிரம் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படும். தூய்மைப் பணியாளர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் வீடுகள் ஒதுக்கப்படும். தூய்மை பணியாளர்கள் அதிகாலையிலேயே வேலைக்கு வர வேண்டி இருப்பதால் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மூலம் காலை உணவு இலவசமாக வழங்கப்படும். இது சென்னை மாநகராட்சி பகுதியில் உடனடியாக செயல்பாட்டுக்கு வரும். எனவே தூய்மை பணியாளர்களின் நலனில் அரசு அக்கறை கொண்டுள்ளதால் போராட்டத்தை கைவிட்டு உடனே பணிக்கு திரும்ப வேண்டும். அவர்களின் பணி நிரந்தரம் தொடர்பான வழக்குகள் முடிவடைந்த பிறகு பரிசீலிக்கப்படும். அரசு அறிவித்துள்ள திட்டங்கள் அனைத்தும், அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் பொருந்தும். இவ்வாறு அவர் கூறினார்.




**மார்க்கெட் விலை நிலவரம்**



BSE ↑ 57.75 பாயின்ட் 80,597.66

NSE ↑ 11.95 பாயின்ட் 24,631.30




**தங்கம்**
1 சவரன் ₹74,320
1 கிராம் ₹9,290



**வெள்ளி**
1 கிலோ ₹127,000
1 கிராம் ₹127.00

**டாலர்** ₹87.61

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34




# பாகிஸ்தான் ராணுவத்தில் புதிய படை உருவாக்கம்

## பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் அறிவிப்பு

**லாகூர், ஆக. 15-**

பாகிஸ்தான் நாட்டின் 79-வது சுதந்திர நாள் நேற்று (ஆக.14) கொண்டாடப்பட்டது. இந்நிலையில், இந்தியா - பாகிஸ்தான் இடையில் 4 நாள்கள் நடைபெற்ற மோதலை நினைவுக்கூரும் வகையில், சில முக்கிய அறிவிப்புகளை பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் நேற்று முன்தினம் (ஆக.13) மாலை வெளியிட்டார்.

அப்போது, பாகிஸ்தான் ராணுவத்தில் புதியதாக அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ராக்கெட் படை ஒன்று உருவாக்கப்படும் என அறிவித்தார். இருப்பினும், புதியதாக உருவாக்கப்படும் அந்தப் படையின் விவரங்கள் குறித்து எந்தவொரு செய்தியும் தெரிவிக்கப்படவில்லை.



இந்நிலையில், பாகிஸ்தானின் இந்தப் புதிய படையானது, அவர்களது கூட்டாளியான சீனாவிடம் இருந்து ஈர்க்கப்பட்டுள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர். சீனாவின் ராக்கெட் படையில் நிலம் சார்ந்த பாலிஸ்டிக், ஹைபர்சோனிக் மற்றும் அணு ஆயுத ஏவுகணைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நிகழ்ச்சியில், பாகிஸ்தான் அதிபர் ஆசிஃப் அலி சர்தாரி மற்றும் முப்படைகளின் தளபதிகளும் கலந்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தியாவுடனான ராணுவ மோதலில் பாகிஸ்தான் மிகப் பெரியளவில் வெற்றிப் பெற்றதாகக் கூறிய பிரதமர் ஷெரீஃப், இந்தியாவின் அணுசக்திக்கு பதிலளிக்க பாகிஸ்தானின் அணுசக்தி திறன் முக்கிய பங்காற்றும் எனவும், இருநாடுகளுக்கு இடையில் போர்நிறுத்தம் கொண்டு வருவதற்கு உதவிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கு தான் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# டி.என்.பி.எஸ்.சி. குரூப் 4: மறுதேர்வு நடத்தக்கோரி தேர்வர்கள் போராட்டம்

**சென்னை, ஆக. 15-**

டி.என்.பி.எஸ்.சி. குரூப் 4 மறுதேர்வு நடத்தக்கோரி சென்னையில் தேர்வர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிராம நிர்வாக அலுவலர், வனவர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் உள்ளிட்ட குரூப்-4 பதவிகளுக்கு கடந்த ஜூலை மாதம் 12-ந்தேதி எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது. 3,935 இடங்களுக்கு நடந்த இந்த தேர்வை 11,48,019 பேர் எழுதி இருக்கின்றனர். தேர்வில் கேட்கப்பட்டு இருந்த வினாக்கள், தேர்வுக்கான பாடத்திட்டத்தை தாண்டி கேட்கப்பட்டு இருந்ததாக தேர்வர்கள் தரப்பில் குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த நிலையில் குரூப்-4 தேர்வை ரத்து செய்துவிட்டு, மறு தேர்வு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாடு அனைத்து நிலை போட்டித் தேர்வர்கள் சங்கம் சார்பில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு மைதானம் முன்பு நேற்று முன்தினம் போராட்டம் நடந்தது. போராட்டத்தில் குரூப்-4 தேர்வு எழுதியவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

மேலும், மறுதேர்வு குறித்து ஆகஸ்டு 20-ந் தேதிக்குள் டி.என்.பி.எஸ்.சி. முடிவெடுத்து அறிவிக்காவிட்டால், இம்மாத இறுதியில் மதுரையில் மிகப்பெரிய அளவில் போராட்டத்தை நடத்துவோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத்துறை சார்பில் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து பிரித்து நாமக்கல் மாவட்டத்தை செயல் எல்லையாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை தொடங்கி வைத்தார்.

# தீபாவளிக்கு பண்டிகைக்கான ரயில் டிக்கெட் முன்பதிவு தேதி அறிவிப்பு

**சென்னை, ஆக. 15-**

சுதந்திர தினம் நாடு முழுவதும் கொண்டாடப்படும் நிலையில், தீபாவளி பண்டிகைக்கு இன்னும் ஒரு சில மாதங்களே இருப்பதால், ரயில் டிக்கெட் முன்பதிவுக்கான தேதி நெருங்கிவிட்டது. இந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகை அக்டோபர் 20-ம் தேதி கொண்டாடப்பட விருக்கிறது. அதுவும் திங்கள் கிழமையில் வருகிறது.

எனவே, தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட சொந்த ஊர்களுக்குச் செல்வோர் அதற்கு முந்தைய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் டிக்கெட் முன்பதிவு செய்வார்கள். அல்லது வார விடுமுறை இருப்பவர்கள் வெள்ளிக்கிழமை அல்லது ஒரு நாள் கூடுதலாக விடுப்பு எடுத்து வியாழக்கிழமையும் ரயிலில் பயணிக்கலாம். அந்த வகையில், அக்டோபர் 17ஆம் தேதி ரயிலில் பயணிக்க, ஆகஸ்ட் 16-ம் தேதி முன்பதிவு தொடங்குகிறது. அக்டோபர் 18-ம் தேதி ரயில் டிக்கெட் முன்பதிவு செய்ய ஆகஸ்ட் 17-ம் தேதி முன்பதிவு தொடங்குகிறது.

எனவே, தீபாவளிக்கு முன்கூட்டியே சொந்த ஊர்களுக்குச் செல்ல திட்டமிட்டிருப்பவர்கள் சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமையே ரயில் டிக்கெட் முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். ஒருவேளை அதற்கும் ஒரு சில நாள்கள் முன்னதாக ரயிலில் செல்ல திட்டமிட்டிருப்பவர்கள் இன்று முதலே டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ளலாம். தொடர் திருவிழாக்கள் வருவதையொட்டி வரும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் குறிப்பிட்ட நாள்களில் ரயில்களில் பயணிக்கும் பயணிகளுக்கு 20 சதவீத கட்டண சலுகையை ரயில்வே அறிவித்துள்ளது.

ரயில்களில் அக்டோபர் 13 முதல் 26-ஆம் தேதி வரை சொந்த ஊர் செல்வதற்கான பயணச் சீட்டை முன்பதிவு செய்து, அதே ரயிலில் நவம்பர் 17 முதல் டிசம்பர் 1-ஆம் தேதி வரை ஊர் திரும்புவதற்கான பயணச்சீட்டை முன்பதிவு செய்பவர்களுக்கு கட்டணத்தில் 20 சதவீத தள்ளுபடி அளிக்கப்படும். இதற்கான கட்டண சலுகை பயணச் சீட்டை வரும் 14-ஆம் தேதி முதல் முன்பதிவு செய்ய முடியும். அக்டோபர் 13 முதல் 26-ஆம் தேதி வரை சொந்த ஊர் செல்வதற்கான பயணத்தை மட்டுமே மேற்கொள்ள முடியும்,. அதே நாள்களில் சொந்த ஊரிலிருந்து ஊர் திரும்புவதற்கான பயணத்தை மேற்கொள்ள முடியாது.

மேலும், சொந்த ஊர் செல்வதற்கு மற்றும் ஊர் திரும்புவதற்கென இருவழி பயணச் சீட்டுகளையும் முன்பதிவு செய்யும்போதுதான், 20 சதவீத கட்டண சலுகையைப் பெற முடியும். அதோடு, இந்த கட்டண சலுகை திட்டத்தின் கீழ் ரயில்களில் ஒரே வகுப்பில் பயணிக்க வேண்டும் என்பதோடு, ஒரே ஊருக்கு மட்டுமே சென்று திரும்ப வேண்டும்.

இத் திட்டத்தின் கீழ் முன்பதிவு செய்யும் பயணச் சீட்டுகளுக்கு கட்டணத்தை திரும்பப் பெற அனுமதிக்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று சுதந்திர தினம் கொண்டாட சொந்த ஊர்களுக்குச் சென்றிருப்பவர்கள், அவசரத்தில், தீபாவளிக்கு ஊருக்குப் போக ரயில் டிக்கெட் முன்பதிவு செய்யாமல் விட்டுவிடக் கூடாது.

# வாக்காளர்களை இழிவுபடுத்த வேண்டாம்: தேர்தல் ஆணையம்

**புதுடெல்லி, ஆக. 15-**


வாக்காளர்களை இழிவுபடுத்த வேண்டாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மக்களவைத் தேர்தலின்போது வாக்காளர் பட்டியலில் முறைகேடு செய்யப்பட்டு, வாக்குத் திருட்டு நடைபெற்றதாகக் குற்றம்சாட்டிய ராகுல் காந்தி, கடந்த வாரம் அதற்கான ஆதாரங்களை வெளியிட்டார். ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகளைத் தலைமைத் தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது.இதைத் தொடர்ந்து, தேர்தல் ஆணையத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், டெல்லி நாடாளுமன்றத்திலிருந்து தேர்தல் ஆணைய அலுவலகம் வரை எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் பேரணியாகச் சென்றனர்.

அப்போது, ராகுல் காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்களை டெல்லி காவல்துறையினர் கைது செய்து, பின்னர் விடுவித்தனர்.வாக்காளர் பட்டியல் விவகாரத்தை எதிர்க்கட்சிகள் தீவிரமாகக் கையிலெடுத்துள்ள நிலையில், தேர்தல் ஆணையம், வாக்குத் திருட்டு என்பது தவறான கருத்து என்று கூறியுள்ளது.

இது குறித்து தேர்தல் ஆணையம் தெரிவிக்கையில், "வாக்குத் திருட்டு போன்ற மோசமான சொற்களைப் பயன்படுத்தி தவறான கருத்தைப் பரப்ப முயல்வது, கோடிக்கணக்கான வாக்காளர்கள் மீதான தாக்குதல் மட்டுமல்ல, லட்சக்கணக்கான தேர்தல் ஊழியர்களின் நேர்மையைப் புண்படுத்துவதும் ஆகும். தேர்தலில் இரண்டு முறை வாக்களித்ததற்கு ஆதாரம் இருந்தால், பிரமாணப் பத்திரத்துடன் ஆணையத்திடம் பகிரலாம்" என்று தெரிவித்துள்ளது.

# திருச்செந்தூர் முருகன் கோவிலில் ஆவணி திருவிழா கொடியேற்றம் கோலாகலம்





**திருச்செந்தூர், ஆக. 15-**

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆவணித் திருவிழா வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதில், பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

கொடியேற்றத்தை முன்னிட்டு கோவில் அதிகாலை 1 மணிக்கு நடைதிறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 2 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம், 3 மணிக்கு தீபாராதனை நடைபெற்றது. அதையடுத்து கொடிப்பட்டம் வெள்ளிப் பல்லக்கில் வைக்கப்பட்டு 9 சந்தி வழியாக கொண்டுவரப்பட்டது. பஞ்சவாத்தியங்கள் முழங்க, வேத பாராயணங்கள் பாட, வாண வேடிக்கையுடன் 5.17 மணிக்கு கோயில் பிரகாரத்தில் உள்ள செப்புக் கொடிமரத்தில் காப்புகட்டிய சிவகுகநாதன் பட்டர் கொடியேற்றினார்.

பின்னர், கொடிமரத்திற்கு 16 வகை அபிஷேகங்கள் மற்றும் அலங்காரமாகி காலை 6.40 மணிக்கு சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. வேத விற்பன்னர்கள் வேதகபாராயணமும், கோயில் ஓதுவார்கள் திருமுறைப் பாராயணமும் பாடினர். இதில், திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீமத் சங்கரலிங்க தம்பிரான் சுவாமிகள், கோவில் இணை ஆணையர் எஸ்.ஞானசேகரன், திருக்கோவில் பணியாளர்கள், திருச்செந்தூர் நகராட்சி துணைத் தலைவர் செங்குலி ரமேஷ், ஏரல் சேர்மன் கோவில் பரம்பரை அக்தார் கருத்தப்பாண்டி நாடார், இந்து முன்னணி மாநில துணைத் தலைவர் வி.பி.ஜெயக்குமார் மற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். திருவிழாவிற்கான ஏற்பாடுகளை அறங்காவலர் குழுத் தலைவர் ரா.அருள்முருகன், இணை ஆணையர் எஸ்.ஞானசேகரன் மற்றும் திருக்கோவில் பணியாளர்கள் செய்துள்ளனர்.

# வாக்குத்திருட்டு என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கு தேர்தல் ஆணையம் பதில்

**டெல்லி, ஆக. 15-**

வாக்குத் திருட்டு' போன்ற மோசமான சொற்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களை வழங்குமாறும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

பிகாரில் தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. தேர்தல் ஆணையம், வாக்குத் திருட்டில் ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறார். அதுதொடர்பான தரவுகள், தகவல்களையும் வெளியிட்டு வருகிறார். ஆனால் இந்த குற்றச்சாட்டுகளுக்கு தேர்தல் ஆணையம் மறுப்பு தெரிவித்து வருகிறது.


தேர்தல் ஆணையத்தால் இறந்தவர்கள் என்று கூறி பிகார் வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப்பட்டவர்களை ராகுல் காந்தி நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார். அதேபோல பிகாரில் பாஜக தலைவர்கள் 2 வாக்காளர் அடையாள அட்டைகளை பெற தேர்தல் ஆணையமே உதவி வருவதாக ஆர்ஜேடி கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ் குற்றம் சாட்டியுள்ளார்.

வாக்குத் திருட்டு' என எதிர்க்கட்சிகள் தொடர்ந்து தேர்தல் ஆணையத்தின் மீது குற்றம்சாட்டி வரும் நிலையில் தேர்தல் ஆணையம் இதற்கு பதில் அளித்துள்ளது. வாக்குத் திருட்டு' போன்ற மோசமான சொற்களைப் பயன்படுத்தி தவறான கதையை உருவாக்குவதைக் குப் பதிலாக உரிய ஆதாரங்களை வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஒருவருக்கு ஒரு ஓட்டு என்பது 1951-1952 ஆம் ஆண்டு தேர்தல் முதலே நடைமுறையில் இருந்து வருகிறது. யாரேனும் எந்த தேர்தலிலாவது 2 முறை வாக்களித்ததற்கான ஆதாரங்கள் இருந்தால் அதை இந்திய தேர்தல் ஆணையத்திடம் எழுத்துப்பூர்வ பிரமாணப் பத்திரத்துடன் பகிர வேண்டும். பதிலாக, எந்த ஆதாரமும் இல்லாமல் 'வாக்குத் திருட்டு' போன்ற மோசமான சொற்களை பயன்படுத்த வேண்டாம்.

இதுபோன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி தவறான கருத்துகளை உருவாக்குவது, கோடிக்கணக்கான வாக்காளர்களின் மீதான நேரடியான தாக்குதல் மட்டுமல்ல, லட்சக்கணக்கான தேர்தல் ஊழியர்களின் நேர்மை மீதான தாக்குதலும்கூட" என்று கூறியுள்ளது.

**15-08-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தனவரவு அதிகரிக்கும். மாணவர்கள் ஆராய்ச்சி மனப்பான்மையோடு செயல்படுவீர்கள். நல்லோரின் தொடர்பு நலத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். கடல் கடந்த வணிகங்கள் லாபம் அளிக்கும்.

**ரிஷபம்:-** வீண் செலவுகள் அதிகரிப்பதால் கடன் வாங்கிக் கஷ்டப்பட நேரும். வீண் வம்புகள் விலைக்கு வாங்காதிருப்பது நல்லது. குடும்பத்தினரிடையே ஒற்றுமை குறையும்.

**மிதுனம்:-** வீடு, மனை வாங்கும் எண்ணங்கள் மனதில் எழும் கூட்டாளிகளால் லாபம் ஏற்படும். பெரிய கதாநாயகனாக எண்ணிக் கொள்வதையும், தியாக மனப்பான்மையும் கை விடுவது நல்லது.

**கடகம்:-** வெற்றி மேல் வெற்றி வரும் நாள். அரசு அதிகாரிகள் மூலம் எதிர்பார்த்த அனைத்து வேலைகளும் அனுகூலமான திசைகளிலும் நகரும். மாணவர்கள் கல்வியில் சிறந்து நல்ல தேர்ச்சி அடைவர்.

**சிம்மம்:-** நிதி நிலைமையில் நல்ல ஏற்றம் தெரியும். தங்கள் மனையாள் இனிய மாற்றங்களையும், இன்பப் பயணங்களையும் விரும்புவார். மாணவர்கள் கல்வியில் நல்ல தேர்ச்சி பெறுவர்..

**கன்னி:-** வாழ்க்கையில் எதிர்பார்த்த மாற்றங்கள் ஏற்படும். குடும்ப உறவுகளிடையே மனைவியால் மனக்கசப்பு உருவாகலாம். வாடிக்கையாளர்களின் மனம் அறிந்து நடந்தால் லாபம் அதிகரிக்கும்.

**துலாம்:-** பெற்றோர்களால் நன்மை பல பெறுவீர்கள். மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமையும். விவசாயம் மூலம் இலாபங்கள் அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு.

**விருச்சிகம்:-** சுகமும், பாக்கியமும் விருத்தியாகும். மனதில் உறுதியும், புதிய உற்சாகமும் உண்டாகும். பகைவர்கள் விலகி ஓடுவர். மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**தனுசு:-** கடினமாக உழைத்தாலும் மேலதிகாரிகள் திருப்தி அடையமாட்டார்கள். ஏதாவது ஒரு சிந்தனையில் மனம் உழன்று கொண்டிருக்கும். சூழ்நிலை மாற்றத்தையும் விரும்புவீர்கள்.

**மகரம்:-** புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்து இடும் முன் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது. வாகன சுகம் குறையும். எதிர்பார்த்த தனவரவு இன்றி கடன் வாங்க நேரும்.

**கும்பம்:-** வியாபாரிகளுக்கு வருமானம் அதிகரித்தால் மன தெம்பும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை புதிய உற்சாகம் தரும். தொழில் விரிவாக்கத்துக்கு வங்கி கடன்கள் கிடைக்கும்.

**மீனம்:-** வரவுக்கு மிஞ்சிய சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். குடும்பத்தாரிடம் சுமுகமாக இருந்தால் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தவிர்க்கவும்.

# அரசியல் சண்டைகளுக்கு நடுவே மாட்டிக்கொண்டிருக்கிறோம்

## தேர்தல் ஆணையம் அதிருப்தி

**புது தில்லி, ஆக. 15-**

அரசியல் சண்டைகளுக்கு நடுவே நாங்கள் மாட்டிக் கொண்டிருப்பதாக சுப்ரீம் கோர்ட்டில் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகளுக்கு இடையேயான போராட்டத்திற்கு இடையில் சிக்கியிருக்கிறோம், அவர்கள் வெற்றி பெற்றால் மின்னணு வாக்கு இயந்திரம் நல்லது, அதுவே அவர்கள் தோற்றுவிட்டால் மின்னணு வாக்கு இயந்திரம் மோசமானது என்று கூறுவார்கள் எனவும் தேர்தல் ஆணையம் கூறியிருக்கிறது. பீகாரில், வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்த முறைக்கு எதிரான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, வாக்காளர் பட்டியலில் இருந்து இறந்தவர்கள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் பெயர்களை நீக்கும் முன்பு, ஏன் காட்சிப்படுத்தவோ அல்லது வலைத்தளத்திலோ வைக்க முடியாது? பாதிக்கப்பட்டவர்கள் 30 நாள்களுக்குள் அது குறித்து கருத்துகளை தெரிவிக்கலாமே என்று தேர்தல் ஆணையத்திடம் சுப்ரீம் கோர்ட் கேள்வி எழுப்பியிருக்கிறது.

இதற்கு பதிலளித்து, தேர்தல் ஆணையம் தரப்பில் சில வாதங்கள் முன் வைக்கப்பட்டன. அதில், தற்போதைய பிரச்னை, கடும் அரசியல் விரோத போக்கால் ஏற்பட்டிருக்கிறது. இதில் எந்த சர்ச்சைக்குரிய முடிவுகளும் இல்லை. எங்களுக்கும் சில முடிவுகளை எடுக்கும் அதிகாரங்கள் உள்ளன. அரசியல் சண்டைகளுக்கு நடுவே மாட்டிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் வென்றால், தேர்தல் நடைமுறை நல்லது என்றும், தோற்றால் மோசமானது என்றும் கூறுவார்கள் எனவும் தேர்தல் ஆணையம் கூறியிருக்கிறது.

இதைக் கேட்ட சுப்ரீம் கோர்ட், இறந்த, இடம்பெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களை காட்சிப் பலகை அல்லது வலைத்தளத்தில் வெளியிடுவது. கவனக்குறைவான பிழைகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்பளிக்கும். இறந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் அல்லது முகவரி மாறியவர்கள் பற்றிய தகவல்கள் பகிரப்படும் வலைத்தளங்கள், இடம், விவரங்கள் குறித்து பொது அறிவிப்பை வெளியிடுவது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு அறிவுறுத்தியிருக்கிறது.

# வட மாநிலங்களில் கனமழை

**புதுடெல்லி, ஆக. 15-**

நாட்டின் தலைநகர் டெல்லி உள்பட வட இந்திய மாநிலங்களில் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. இமாசல பிரதேசம், உத்தராகண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் கொட்டி தீர்த்த மழையால் பெரும்பாலான இடங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டெல்லியில் முக்கிய சாலைகளில் கூட முட்டளவுக்கு தண்ணீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் கடும் சிரமம் அடைந்தனர். டெல்லியில் நேற்றும் கனமழைக்கான ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உத்தர பிரதேசத்தின் காசியாபாத் மற்றும் குருகிராமில் கனமழையால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. வரும் 17 ஆம் தேதி வட இந்திய மாநிலங்களில் மழை நீடிக்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. உத்தர பிரதேசத்தின் வட மாவட்டங்களான பெய்ரேலி, லகிம்பூர், பிலிபட், ஷஜன்பூர் உள்ளிட்ட இடங்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**மரம் மனிதனின் உரம்**

# 8 தமிழக மீனவர்களுக்கு அபராதம், 16 பேருக்கு மேலும் காவல் நீட்டிப்பு

## இலங்கை நீதிமன்றம் உத்தரவு

**ராமேசுவரம், ஆக. 15-**

சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 8 பேருக்கு ரூ.9 லட்சம் அபராதம் விதித்தும், 16 மீனவர்களுக்கு காவல் நீட்டிப்பு செய்தும் இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து கடலுக்குச் சென்ற ஜேசு என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் ஜேசு, அண்ணாமலை, கல்யாண ராமன், செய்யது இப்ராஹிம், முனிஸ்வரன், செல்வம், காந்திவேல் உள்பட 8 மீனவர்களை தலைமன்னார் அருகே இலங்கை கடற்படையினர் ஜூன் 29-ம் தேதி சிறைப்பிடித்தனர். சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்கள் மீது எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து நீதிமன்றக் காவலில் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர்.

மீனவர்களின் காவல் நேற்றுடன் நிறைவடைந்ததைத் தொடர்ந்து மன்னார் நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, 8 மீனவர்களுக்கு தலா இலங்கை மதிப்பின்படி தலா ரூ.5 லட்சம் என ரூ.40 லட்சம் அபராதம் விதித்து உத்தரவிட்டார். இந்திய மதிப்பின்படி ரூ.9 லட்சத்து 33 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அபராத தொகை கட்டிய பின் 8 மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனிடையே, ஜூன் 30-ம் தேதி அன்று சிறைபிடிக்கப்பட்ட 7 மீனவர்கள், ஜூலை 22-ம் தேதி அன்று சிறைபிடிக்கப்பட்ட 4 மீனவர்கள், ஜூலை 28-ம் தேதி அன்று சிறைபிடிக்கப்பட்ட 5 மீனவர்கள் என மொத்தம் 16 மீனவர்களுக்கு வரும் ஆகஸ்ட் 29-ம் தேதி வரை நீதிமன்ற காவலை நீட்டித்து மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தூய்மைப்பணியாளர்கள் கைது: எடப்பாடி பழனிசாமி கண்டனம்



**சென்னை, ஆக. 15-**

தூய்மைப் பணியாளர்கள் கைதுக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

வணக்கம் ஸ்டாலின் அவர்களே... ரிப்பன் மாளிகை வாசலில், நள்ளிரவில் அடக்குமுறையை ஏவி, கொரோனாவின்போது கூட நம் குப்பைகளை நீக்கி சுத்தம் செய்த தூய்மைப் பணியாளர்களை அடித்து நொறுக்கி, அங்கிருந்து அகற்றி பல்வேறு இடங்களில் சிறை வைத்துள்ளனர் உங்கள் ஏவல்துறை.

யார் அவர்கள்? சமூக விரோதிகளா? குண்டர்களா? நக்சலைட்டுகளா? இல்லையே. ஏழை, எளிய மக்கள்! அன்றாடம் தூய்மைப் பணி செய்து, சென்னை மாநகரை சுத்தமாக வைத்திருந்தவர்கள். நீங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் அதற்கு நேர்மாறாக செயல்பட்டதைக் கண்டித்து தூய்மைப் பணியாளர்கள் அறவழியில் போராடியது ஒரு தவறா? அவர்களோடு டீ, காபி அருந்தியது போல் போட்டோஷூட் எடுத்துக்கொண்டீர்களே... அப்போது மட்டும் இனித்தது? இப்போது நீங்கள் கொடுத்த வாக்குறுதியைக் கேட்கும் போது கசக்கிறதா? எதிர்க்கட்சித் தலைவராக நீங்கள் இருந்தபோது எழுதிய கடிதங்களில், எந்த வழக்கு இருந்தாலும், இவர்களை பணி நிரந்தரம் செய்யுங்கள் என்று நாடகமாடினீரே, நினைவில் இருக்கிறதா?

நள்ளிரவில் அடாவடித்தனமாக, வலுக்கட்டாயமாக நம் அரசுக்கும், மக்களுக்கும் பணிபுரியும், நலிவடைந்த தூய்மைப் பணியாளர்கள் மீது 79 ஆண்டுகால சுதந்திர இந்தியாவில் இது போன்ற ஒரு அடக்குமுறையை எந்த அரசும் ஏவியதில்லை. தூய்மைப் பணியாளர்கள் 8-க்கும் மேற்பட்ட இடத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள், அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும், இந்த அடாவடி நடவடிக்கைகளால் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கவும் வலியுறுத்துகிறேன்.

தூய்மைப் பணியாளர்களின் கண்ணீரை, வலியை, வேதனையை தமிழ்நாடே பார்த்து கலங்குகிறது. அவர்கள் சிந்திய ஒவ்வொரு கண்ணீருக்கும் நீங்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும். சொல்ல வேண்டிய காலம் அவ்வளவு தூரமெல்லாம் இல்லை. இன்னும் 8 மாதங்கள் தான். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

### அவர்கள் தேச விரோதிகளா?

# தூய்மைப் பணியாளர்கள் கைது விவகாரத்தில் விஜய் ஆவேசம்

**சென்னை, ஆக. 15-**

அராஜகப் போக்குடன் கைது செய்யப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அவர்கள் தங்களின் கோரிக்கைகளை முன்னிறுத்திப் போராடுவதற்கு மாற்று இடம் வழங்கப்பட வேண்டும் என்று தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை முன்பு கடந்த 13 நாட்களாக போராட்டம் நடத்திவந்த தூய்மைப் பணியாளர்கள், அவர்களுக்கு ஆதரவாக போராடியவர்கள் என 600-க்கும் மேற்பட்டோரை நள்ளிரவில் கைது செய்து, காவல் துறையினர் வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தினர். மிகுந்த பரபரப்பான இந்தச் சம்பவம் குறித்து தவெக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தங்களின் உரிமைகளுக்காக அறவழியில் போராடி வந்த தூய்மைப் பணியாளர்களை அராஜகப் போக்குடன் மனிதாபிமானமற்ற முறையில் இரவோடு இரவாகக் கைது செய்த பாசிசத் திமுக அரசுக்குக் கண்டனம். குண்டுக் கட்டாக இழுத்துச் சென்று கைது செய்த போது பெண் தூய்மைப் பணியாளர்கள் மயக்கம் அடைந்ததோடு மட்டுமல்லாமல், அவர்கள் படுகாயம் அடைந்திருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

நள்ளிரவில் நடைபெற்ற இந்தக் கைது நடவடிக்கையைப் பார்க்கும் போது மனசாட்சியுள்ள எவரானாலும் தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்குப் பெண்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பது தெரிகிறது. காயம் அடைந்தவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவியையும் சிகிச்சையையும் உடனடியாக வழங்கி, அவர்களின் உடல்நலத்தைக் காக்கத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

கைது செய்யப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் வெவ்வேறு இடங்களில் தங்களின் குடும்பத்தினரோடு கூடத் தொடர்புகொள்ள முடியாத வகையிலும் எவ்வித உதவிகளும் கிடைக்காத வகையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். குடும்பத்தினரோடு கூடத் தொடர்பு கொள்ள முடியாத அளவிற்கு அடைத்து வைக்க, தூய்மைப் பணியாளர்கள் என்ன தேச விரோதிகளா? ஆளும் அரசுக்கு மனசாட்சி சிறிதளவேனும் இருக்கிறதா? இந்தக் கொடூரமான நடவடிக்கையைப் பார்த்தால் தமிழ்நாட்டில் நடப்பது மக்களாட்சியல்ல, கொடுங்கோலாட்சிதான் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

எதிர்க்கட்சியாக இருந்தபோது கொடுத்த வாக்குறுதியைத் தான் நிறைவேற்றச் சொல்லித் தூய்மைப் பணியாளர்கள் போராடி வருகிறார்கள். அதை ஏன் இன்னும் நீங்கள் நிறைவேற்றவில்லை? அப்படிக் கொடுத்த வாக்குறுதியை உங்களால் நிறைவேற்ற முடியாது எனில், ஏன் வாக்குறுதிகளைக் கொடுக்கிறீர்கள்? அராஜகப் போக்குடன் கைது செய்யப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அவர்கள் தங்களின் கோரிக்கைகளை முன்னிறுத்திப் போராடுவதற்கு மாற்று இடம் வழங்கப்பட வேண்டும்." எனக் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், "உங்களுடன் ஸ்டாலின்" மற்றும் "நலம் காக்கும் ஸ்டாலின்" ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.

### நாமக்கல் மாவட்டத்தில்

# மத்திய கூட்டுறவு வங்கியை துவக்கி வைத்தார் முதல்வர் மு.க. ஸ்டாலின்

**சென்னை, ஆக. 15-**

மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து பிரித்து புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை முதல்வர் தொடங்கி வைத்தார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:- தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து பிரித்து நாமக்கல் மாவட்டத்தை செயல் எல்லையாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை தொடங்கி வைத்தார்.

நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் 165 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 4 மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களும், 393 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும், 86 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், 26 பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 3 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களும், 5 கூட்டுறவு நகர வங்கிகளும், 7 தொடக்கக் கூட்டுறவு வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளும் மற்றும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளிட்ட 746 சங்கங்கள் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ.76.19 கோடி பங்குத் தொகையுடனும் ரூ.1826.56 கோடி இட்டு வைப்பும் ரூ.1636.07 கோடி கடன் நிலுவையும் கொண்டு செயல்படத் தொடங்கியுள்ளது. இவ்வங்கியில் 2024-2025-ஆம் நிதியாண்டில் 55,583 விவசாயிகளுக்குப் பயிர்க்கடனாக ரூ.625.81 கோடியும், கால்நடை பராமரிப்புக்கடனாக 14,346 விவசாயிகளுக்கு ரூ.117.86 கோடியும், மத்திய காலக் கடனாக 1,324 விவசாயிகளுக்கு ரூ.13.78 கோடியும், நகைக்கடனாக 1,64,969 நபர்களுக்கு ரூ.1,489.81 கோடியும், மகளிர் சுய உதவிக்குழு கடனாக 1,878 குழுக்களுக்கு ரூ.162.65 கோடியும், 473 மாற்றுத்திறனாளிகளுக்குக் கடனாக ரூ.2.69 கோடியும், 180 விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக்கடனாக ரூ.11.85 கோடியும், 776 கூட்டுப்பொறுப்பு குழுக்களுக்குக் கடனாக ரூ.3.99 கோடியும் வழங்கப்பட்டு உள்ளன.

மேலும், தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டமான கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.34 லட்சமும், டாம்கோ திட்டத்தின் கீழ் ரூ.82 லட்சமும், டாப்செட்கோ திட்டத்தின் கீழ் ரூ.3.91 கோடியும், தாட்கோ திட்டத்தின் கீழ் ரூ.45 லட்சமும், கல்விக்கடனாக ரூ.63 லட்சமும், மூன்றாம் பாலினத்தவர்களுக்கான சிறகுகள் திட்டத்தின் கீழ் ரூ.2.50 லட்சமும், விதவைகளுக்குக் கடன் தொகையாக ரூ.68 லட்சமும் இவ்வங்கியின் மூலம் வழங்கப்பட்டு உள்ளன. தமிழ்நாடு அரசின் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் மாதந்தோறும் 15,273 மகளிருக்கும், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 33 மாணவிகளுக்கும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 397 மாணவர்களுக்கும் வங்கி கணக்கில் ரூ.1000 வரவு வைக்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்கள் எளிதில் பணம் பெறும் வகையில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு வாடிக்கையாளர்களுக்குச் சேவை அளித்து வருகின்றது. நடமாடும் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மற்றும் பி.ஓ.எஸ். இயந்திரங்கள் வாயிலாகவும் சிறப்பான சேவை அளிக்கப்பட்டு வருகின்றது. அனைத்து கிளைகளிலும் பாதுகாப்பு பெட்டக வசதிகள் உள்ளன.

சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில் முதலாவதாக உருவாக்கப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஒரு மேலாண்ம இயக்குநர், ஒரு முதன்மை வருவாய் அலுவலர், ஒரு பொது மேலாளர், 2 உதவிப் பொது மேலாளர்கள், 23 மேலாளர்கள், 34 உதவி மேலாளர்கள், 93 உதவியாளர்கள், 4 அலுவலக உதவியாளர்கள் ஆகிய 159 பணியாளர்களுடன் செயல்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து கோரி வழக்கு:

# மத்திய அரசு பதிலளிக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவு

**புதுடெல்லி, ஆக. 15-**

ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து கோரிய வழக்குக்கு மத்திய அரசு பதிலளிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் சட்டப்பிரிவு 370-ஐ மத்திய அரசு கடந்த 2019-ம் ஆண்டு நீக்கியது. அதன்பிறகு, ஜம்மு காஷ்மீரின் மாநில அந்தஸ்து நீக்கப்பட்டு, ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட்டது. ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய சட்டப்பிரிவு 370-ஐ நீக்கியதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. கடந்த 2023-ல் இந்த வழக்கில் தீர்ப்பளித்த சுப்ரீம் கோர்ட்டு, காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய 370-வது பிரிவை ரத்து செய்தது செல்லும் என்று தெரிவித்தது.

மேலும், 2024 செப்டம்பர் மாதத்துக்குள் சட்டமன்றத் தேர்தலை நடத்தி, ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்தை மீண்டும் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டது. ஜம்மு காஷ்மீரில் சட்டமன்றத் தேர்தல் முடிவடைந்துவிட்டது. இருப்பினும், மாநில அந்தஸ்து இன்னும் வழங்கப்படவில்லை. இந்நிலையில், ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கல்வியாளர் ஜஹூர் அகமது பட் மற்றும் சமூக ஆர்வலர் குர்ஷைத் அகமது மாலிக் ஆகியோர் சுப்ரீம் கோர்ட்டில் மனுத் தாக்கல் செய்தனர்.

இந்த மனுவில், மாநில அந்தஸ்து மறுக்கப்படுவது ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் வகையில் உள்ளதாகக் கூறப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் மற்றும் நீதிபதி கே.வி. சந்திரன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, "பஹல்காம் தாக்குதலை கருத்தில் கொள்ள வேண்டும். கள எதார்த்தத்தை புறக்கணிக்க முடியாது. அதனை கருத்தில் கொள்ள வேண்டும்," என்று நீதிபதிகள் தெரிவித்தனர். மேலும், இந்த விவகாரத்தில் எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

# டி.ஜி.பி. நியமனம் தொடர்பான வழக்கு: ஐகோர்ட் கிளையில் முடித்து வைப்பு

**மதுரை, ஆக. 15-**

தமிழக டி.ஜி.பி., சங்கர் ஜிவால் பதவிக் காலம் வருகிற 31-ம் தேதி முடிவடைகிறது. புதிய டி.ஜி.பி.,யை தேர்வு செய்வதற்கான நடைமுறைகளை துவக்க வேண்டும். பொறுப்பு டி.ஜி.பி.,யை நியமிக்கக் கூடாது என மதுரை ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நேற்று காலை விசாரணைக்கு வந்த போது நீதிபதிகள், 'தேர்வு செய்யும் நடைமுறை துவங்கியுள்ளதா, இல்லையா என்பது குறித்து தமிழக அரசு தரப்பில் பகல் 2:15 மணிக்கு தெரிவிக்க வேண்டும்' என கூறி ஒத்திவைத்தனர். இதையடுத்து, பிற்பகல் 2:15 மணிக்கு மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் அஜ்மல் கான், உள்துறை செயலாளரிடம் விபரம் பெற்றேன். புது டிஜிபி நியமன நடைமுறைகள் தற்போது தொடங்கி நடந்து வருகிறது என்றார். பின்னர் இந்த சூழலில் நீதி மன்றம் தலையிட விரும்பவில்லை. வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது என கூறி ஐகோர்ட் மதுரைக்கிளை நீதிபதிகள் வழக்கு விசாரணையை முடித்து வைத்தனர்.

# இந்தியா-பாக். பிரிவினை காயம் ஆறவில்லை: தமிழ்நாடு கவர்னர்

**சென்னை, ஆக. 15-**

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின் காயங்கள் இன்னமும் ஆறவில்லை என்றும் ஆளுநர் ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

நாடு சுதந்திரம் அடையும் முன்பாக பிரிவினையை எதிர்கொண்டது. ஆகஸ்ட் 15, 1947ல் நாட்டின் சுதந்திரம் அறிவிக்கப்படுவதற்கு ஒரு நாள் முன்பாக ஆகஸ்ட் 14, 1947 அன்று பாகிஸ்தான் தனி நாடாக பிரிந்தது. சுதந்திர தினம் இன்று கொண்டாடப்பட உள்ள நிலையில், பிரிவினையால் நிகழ்ந்த பெரும் சோகத்தை சுட்டிக்காட்டி ஆளுநர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் தனது அறிக்கையில், பாரதம் தனது 5,000 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றில் ஒருபோதும் நடந்திராத சம்பவத்தை ஆழ்ந்த வேதனையுடன் நினைவுகூர்கிறது. பாரதத்தாயின் பல லட்சம் அப்பாவி குழந்தைகளைக் கொன்று, முஸ்லிம்களுக்கு ஒரு தனி நாடு என்ற அடிப்படையில் முஸ்லிம் லீக் அதன் வன்முறையைக் கட்டவிழ்த்தது.

முஸ்லிம் லீக்கால் 'காஃபிர்கள்' என்று முத்திரை குத்தப்பட்டதால், பல்லாயிரம் ஆண்டுகளாக தங்கள் மூதாதையர்கள் வாழ்ந்த நிலத்திலிருந்து லட்சக்கணக்கானவர்கள் வேரறுக்கப்பட்டனர். பிரிவினையின் காயங்கள் இன்னமும் ஆறவில்லை. பல்வேறு போர்வையில் இதேபோன்ற சக்திகள் அதிகரித்து வருவதால், ஆழ்ந்த உணர்வுடன் இதே நாளை பாரதம் நினைவுகூர்கிறது. அவை பொய்கள் மற்றும் ஏமாற்றுச்செயல்கள் மூலம் தேசத்தின் தன்னம்பிக்கையை உடைக்கவும், நம் மக்களின் மன உறுதியைக் குலைக்கவும் முயல்கின்றன.

தேசத்தின் உறுதியை பலவீனப்படுத்தவும், வரலாற்றை திரும்பி நிகழ்த்தவும் நயவஞ்சகம் செய்யும் அவர்களை, தன்னம்பிக்கை கொண்ட சுயசார்பு பாரதத்தின் அற்புதமான எழுச்சியில் மகிழ்ச்சி கொள்ளாத வெளிவிரோத சக்திகள் ஊக்குவிக்கின்றன. வளர்ச்சியடைந்த பாரதம் என்ற எண்ணத்தை நோக்கி நமது தேசம் அணிவகுத்துச் செல்லும் இந்த முக்கியமான காலகட்டத்தில், அவர்களின் தீய நோக்கத்துக்கு எதிராக ஒவ்வோர் பாரதியரும், குறிப்பாக தமிழ்நாட்டின் எனது சகோதர, சகோதரிகளும் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

### ஜம்மு-காஷ்மீரில்

# மேகவெடிப்பு - 38 பேர் பலி

**காஷ்மீர், ஆக. 15-**

ஜம்மு - காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் மேகவெடிப்பால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி சுமார் 38 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிஷ்த்வார் மாவட்டத்தில் இருந்து 90 கி.மீ. தூரத்தில் 9,500 அடி உயரத்தில் அமைந்துள்ள சஸோட்டி கிராமத்தில், நேற்று (ஆக.14) மதியம் 38 மணியளவில் மேகவெடிப்பு ஏற்பட்டு திடீர் வெள்ளம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

கிஷ்த்வாரில், மலை மீது இருக்கும் மசாயில் மாதா கோயிலுக்கு, செல்லும் வழியில் அமைந்துள்ள கடைசி கிராமம் சஸோட்டி. அங்கிருந்து சுமார் 8.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கோயிலுக்கு புனித யாத்திரை மேற்கொள்ள ஏராளமான பக்தர்கள் அங்கு திரண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், திடீரென ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியான 38 பேரின் உடல்கள் தற்போது மீட்கப்பட்டுள்ளன. எனவே, இந்தப் பேரிடரால் பலியானோரது எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் மசாயில் மாதா கோயிலை நோக்கி நடத்தப்படும் புனித யாத்திரை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டதுடன், தேசிய பேரிடர் மீட்புப் படையினர் கிஷ்த்வாரில் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்துடன், அப்பகுதியில் அமைந்திருந்த ஏராளமான வீடுகள் உள்ளிட்ட கட்டமைப்புகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு மேற்கொள்ளப்படும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவதுமாக நிறைவடைய சுமார் 20 நாள்கள் தேவைப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### பீகார், உ.பி., இ.பி. உள்ளிட்ட

# வட மாநிலங்களில் கனமழை டெல்லிக்கு ஆர்ஞ்ச் எச்சரிக்கை

**புதுடெல்லி, ஆக. 15-**

பீகார், உத்தரப்பிரதேசம், இமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பருவமழை தீவிரமடைந்துள்ளது. டெல்லிக்கு ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தற்போது பருவமழை தீவிரமடைந்துள்ளது. ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், டெல்லி, இமாச்சலப் பிரதேசம் என பல மாநிலங்களில் பரவலாக தொடர் மழை பெய்து வருகிறது.

**டெல்லியில் கனமழை:**

டெல்லியில் பெய்து வரும் மழை காரணமாக பெரும்பாலான சாலைகளில் மழை நீர் தேங்கி நிற்கிறது. டெல்லி-என்சிஆர், லஜ்பத் நகர், ஆர்கே புரம், லோதி சாலை, டெல்லி-ஹரியானா எல்லை உள்ளிட்ட பகுதிகளில் மழை நீர் சாலைகளில் தேங்கி உள்ளதால் வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி உள்ளனர்.

அடுத்த 24 மணி நேரத்துக்கு கன மழை பெய்யும் என்பதால் இந்திய வானிலை ஆய்வு மையம் டெல்லிக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. பகலில் மிதமானது முதல் கனமழை வரை பெய்யும் என்றும், பல பகுதிகளில் இடியுடன் கூடிய கன மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

**உத்தரப்பிரதேசம்:**

உத்தரப் பிரதேசத்தில் பெய்து வரும் கன மழை காரணமாக, தலைநகர் லக்னோ உட்பட மாநிலத்தின் பல பகுதிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டது. இமாச்சலப் பிரதேசம்: இமாச்சலத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் பல பகுதிகளில் உள்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளன. இம்மாநிலத்தில் கடந்த 24 மணி நேரமாக தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

**இமாச்சலப் பிரதேசம்:**

இமாச்சலப் பிரதேசத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன. "இமாச்சலப் பிரதேசத்தின் பல மாவட்டங்களில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. 396 சாலைகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. பல இடங்களில் வீடுகள் சேதமடைந்துள்ளன, வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. உயிர் இழப்பு எதுவும் பதிவாகவில்லை" என்று இமாச்சல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**பீகார்:**

பீகாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் முதல்வர் நிதிஷ் குமார் ஹெலிகாப்டர் மூலம் ஆய்வு மேற்கொண்டார். "பெருமழை காரணமாக பல ஆறுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கங்கை, கோசி, பாக்மதி, புர்ஹி கண்டக், புன்புன் மற்றும் காகாரா ஆகிய ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. பல இடங்களில், இந்த ஆறுகள் அபாய அளவைத் தாண்டி ஓடுகின்றன. போஜ்பூர், பாட்னா, சரண், வைஷாலி, பெகுசராய், லக்கிசராய், முங்கர், ககாரியா, பாகல்பூர் உட்பட 10 மாவட்டங்களில் சுமார் 25 லட்சம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்" என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தெரு நாய்களை அப்புறப்படுத்த இடைக்காலத் தடை ஏதுமில்லை

## தீர்ப்பை ஒத்திவைத்தது சுப்ரீம் கோர்ட்

**டெல்லி, ஆக. 15-**

தெரு நாய்கள் விவகாரம் தொடர்புடைய வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அமர்வு, இடைக்கால தடை எதுவும் விதிக்காமல் தீர்ப்பை ஒத்திவைத்தனர்.

நாய்க் கடி சம்பவங்கள் மிகவும் மோசமான சூழ்நிலை ஏற்படக் காரணமாக இருப்பதாக குறிப்பிட்டு, தில்லி - என்.சி.ஆர். பகுதியில் அனைத்து தெரு நாய்களையும் விரைந்து நிரந்தரமாக காப்பகங்களுக்கு இடமாற்றம் செய்ய நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, ஆகஸ்ட் 11-ஆம் தேதி உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பை எதிர்த்து, கான்ஃபரன்ஸ் ஃபார் ஹியூமன் ரைட்ஸ் (இந்தியா) அமைப்பின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி முன் புதன்கிழமை முறையிடப்பட்டது. இந்த விவகாரத்தை அவசர வழக்காகக் கருதி விசாரணைக்குப் பட்டியலிட கோரிக்கை வைக்கப்பட்ட நிலையில், பரிசீலிப்பதாக தெரிவித்த தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் மாலையில் மூன்று நீதிபதிகள் அமர்வு விசாரணைக்கு வழக்கை மாற்றி உத்தரவிட்டார்.


இந்த வழக்கு நீதிபதிகள் விக்ரம் நாத் தலைமையிலான அமர்வு முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் சந்தீப் மேத்தா, என்.வி. அஞ்சாரியா ஆகியோரும் இந்த அமர்வில் இடம்பெற்றிருந்தனர். மத்திய அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா கருத்தடை, அறுவை சிகிச்சைகள் ரேபிஸ் நோயை நிறுத்தாது என்று குழந்தைகள் பாதிக்கப்படுவதாகவும் வாதத்தை முன்வைத்தார்.

நாய்களை அடைத்து வைப்பதற்கு மாநகராட்சி காப்பகங்களை கட்டவில்லை, முறையாக கருத்தடை மற்றும் தடுப்பூசிகள் தெரு நாய்களுக்கு போடுவதில்லை, நாய்கள் அனைத்தையும் ஒன்றாக வைத்து பராமரிக்கும்போது, உணவுகள் வீசப்பட்டால் ஒன்றைஒன்று தாக்கிக் கொண்டு உயிரிழக்க நேரிடும், இதனை அனுமதிக்க முடியாது என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதிகள், "மேம்போக்கான வாதங்களை நீதிமன்றத்தில் முன்வைக்க வேண்டாம். பொறுப்புடன் செயல்பட வேண்டும். நாடாளுமன்றம் விதிகளையும் சட்டங்களையும் உருவாக்குகிறது, ஆனால் செயல்படுத்துவதில்லை. அரசின் செயலற்ற தன்மையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. ஒருபுறம் நாய்கடியால் மனிதர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மறுபுறம் விலங்கு நல ஆர்வலர்கள். மனு தாக்கல் செய்துள்ள அனைவரும் பிரமாணப் பத்திரங்களை தாக்கல் செய்து ஆதாரம் வழங்க வேண்டும்" எனத் தெரிவித்தனர். மேலும், இரு நீதிபதிகள் அமர்வின் உத்தரவுக்கு இடைகாலத் தடை எதுவும் விதிக்காமல் தீர்ப்பை ஒத்திவைத்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


**மரம்**
**மனிதனின்**
**உரம்**

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




கிராமப்புறங்களில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீட்டில் தூய்மைப் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் உள்ளிட்ட தூய்மைப் பணியாளர்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை தொய்வு இன்றி செயல்படுத்தும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- வைகோ




அறிவு, அனுபவம், மேலாண்மைத் திறன், மற்றும் மனிதர்களை மதித்து நடந்துகொள்ளும் பண்பு ஆகிய நான்கும் சேர்ந்ததுதான் தலைமைப் பண்பு. ஒரு சிறந்த தலைவர் அனைவரையும் துணையாகக் கொண்டு, கருத்துகளுக்கு மதிப்பளித்து, இயக்கத்தை திறம்பட மேலாண்மை செய்வார். இதற்கு மாறாக செயல்படுபவர் ஏளனத்திற்குரியவராக இருப்பார்.

- ஓ.பன்னீர்செல்வம்



கடைக்கோடி பணியில் இருக்கும் தூய்மைப் பணியாளர்களுக்கு ஆதரவுக் கரம் அளித்து அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தவும், கைது செய்யப்பட்டுள்ள தூய்மைப் பணியாளர்களையும், அவர்களுக்காக போராடிய ஜனநாயக சக்திகளையும் விடுவிக்க தமிழ்நாடு முதல்வர் இப்பிரச்சினையில் நேரடியாக தலையிட்டு சுமுக தீர்வு காண வேண்டும்.

- செல்வப்பெருந்தகை



மோடி அரசு நாட்டில் 4 செமி கண்டக்டர் உற்பத்தித் திட்டங்களுக்கு பச்சைக் கொடி காட்டி உள்ள நிலையில். அதில் ஒன்றை தெலுங்கானாவிலிருந்து குஜராத்துக்கு மாற்ற மோடி வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதேபோல், தமிழ்நாட்டிற்காக திட்டமிடப்பட்ட மற்றொரு தொழிற்சாலை குஜராத்திற்கு மாற்ற வேண்டும் என ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

- ஜெய்ராம் ரமேஷ்

thinaboomi.com தினபூமி, சென்னை ஆகஸ்ட் 15, 2025

# சென்னை திருவொற்றியூர் 7வது வட்டத்தில் கொட்டும் மருத்துவ கழிவுகள்: பகுதி பொது மக்கள் கடும் எதிர்ப்பு



**திருவொற்றியூர். ஆக.15**

சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் மண்டலம் 7வது வட்டத்தில் கார்கில் வெற்றி நகர் ராஜாஜி நகர் மற்றும் வெற்றி விநாயகர் நகர் ஆகிய பகுதிகள் கழிவெளி புறம்போக்கு நிலங்களில் உள்ளது. இங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் பட்டா வழங்காத இடத்தில் வசித்து வருகிறார்கள்.

கடந்த ஆண்டு வெற்றி விநாயகர் நகர் பகுதியில் சாத்தங்காடு ஸ்டில் யார்டுக்கு செல்லும் ரயில் பாதை அருகே சென்னை மற்றும் வெளிமாவட்டங்களிலிருந்து மருத்துவமனை கழிவுகள் கொட்டப்பட்டு வந்ததால் பொதுமக்களும் அந்த வார்டு அதிமுக கவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் மற்றும் அதிமுக வினர் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துறை அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து இனிமேல் இங்கு இது போன்ற மருத்துவ கழிவுகள் கொட்டப்படாது என்று உறுதிமொழி அளித்ததால் பொதுமக்கள் பின்வாங்கினர்.

இந்த சூழ்நிலையில் இந்த மாதத்தில் அதே இடத்தில் மருத்துவமனை கழிவுகள் கொட்டப்படுவதாக பொதுமக்கள் கவுன்சிலரிடம் புகார் கூறியதால் கவுன்சிலர் கார்த்திக் மற்றும் அதிமுகவினர் அந்த இடத்தை பார்வையிட்டு மீண்டும் மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்டால் மண்டல அலுவலகத்தில் பொதுமக்கள் முற்றுகை போராட்டம் நடத்துவார்கள் என்று எச்சரித்தனர்.திருவொற்றியூர் மண்டலம்7வது வட்டத்தில் பக்கிம்காம் கால்வாய் மாநகர போக்கு வரத்து சாலை அருகே மாநகராட்சி நிர்வாகம் கழிவுகள் கொட்டுவதற்கும் பிராணிகள் நலனுக்காக புதிய கட்டிடங்கள் கட்டிவருகிறது. இந்த இடத்திற்கு முன்பாக சி.பி.சி.எல். மேம்பாலம் தொடக்கத்திலிருந்து சாத்தாங்காடு ஸ்டீல்யார்டு செல்லும் ரயில்வே கேட் முன்பாக பிரதான நெடுஞ்சாலை சீரமைப்பதற்கு முதற்கட்டமாக மாநகராட்சி மூலதனநிதியில் ரூ.10 லட்சம் செலவில் தார் சாலைகள் அமைக்கப்பட உள்ளன. அந்த இடங்களை மாமன்ற கவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் அதிமுக நிர்வாகிகள் கண்ணன் ஸ்டீபன் எட்வின் சுப்பிரமணியம் பொன் செல்வம் ஆகியோர் பார்வை யிட்டனர்.

# ராயபுரம் சட்டமன்ற தொகுதி, மூலக்கொத்தளம் விளையாட்டு அரங்கம் மற்றும் ஏழுகிணறு, சண்முகம் தெருவில் முதல்வர் படைப்பக பணிகள்

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்



**சென்னை,ஆக.15**

சென்னை ராயபுரம் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்படவுள்ள மூலக்கொத்தளம் விளையாட்டு அரங்கம் மற்றும் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, ஏழுகிணறு, சண்முகம் தெருவில் அரசு பொது நூலகத்தை மேம்படுத்தி "முதல்வர் படைப்பகம்" அமைப்பதற்கான பூமி பூஜையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி. கே.சேகர்பாபு அவர்கள் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.இந்நிகழ்ச்சிகளில் மேயர்.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்.ஐட்ரீம் இரா.மூர்த்தி, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர்கோ.பிரகாஷ், , மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர்கட்டா ரவி தேஜா, மாநகராட்சி நகரமைப்பு குழுத்தலைவர்இளைய அருணா, மண்டலக் குழுத்தலைவர்பி. ஸ்ரீராமுலு, சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர்மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர்ராஜன்பாபு, மாவட்ட நூலக அலுவலர்.கவிதாமாமன்ற உறுப்பினர்கள்தாஹா நவீன், .வேளாங்கன்னி, ஆகியோர் உடனிருந்தனர்.



**முதல்வரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் திருவிகநகர் மண்டலம் 74வது வார்டில் மேயர் ஆர்.பிரியா வயது முதிர்ந்தவர்களின் வீடுகளுக்கு சென்று ரேசன் பொருட்களை வழங்கினார்.**



**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டு பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் அமைச்சர் இரா. ராஜேந்திரன் தலைமையில் நடந்தது. இதில் கூடுதல் தலைமை செயலாளர் மணிவாசகன், மேலாண்மை இயக்குனர் கிறிஸ்துராஜ், பொதுமேலாளர் கவிதா கலந்து கொண்டனர்.**

# கொலை முயற்சி வழக்கில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளி கைது

**சென்னை ஆக 15-**

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில் நீதிமன்ற விசாரணை நிலுவை வழக்குகளில் அதிக முக்கியத்துவம் வழங்கி எதிரிகளுக்கு உரிய நீதிமன்ற தண்டனை பெற்று தந்து, பாதிக்கப்பட்டோருக்கு உரிய நீதி பெற்று தந்திட, 12 காவல் மாவட்டங்களிலும் துணை ஆணையர்களின் மேற்பார்வையில் உதவி ஆணையர்கள், காவல் ஆய்வாளர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை கண்காணித்து வழக்குகளில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவு குற்றவாளிகளை கைது செய்திட, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, கடந்த 2018ம் ஆண்டு வில்லிவாக்கம் காவல் நிலையத்தில் பதிவான கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி விசு (எ) விஸ்வநாதன் என்பவரை கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் நீதிமன்ற பிணையில் வெளியே சென்ற எதிரி விசு (எ) விஸ்வநாதன், சிங்காரவேலர் மாளிகை, 18வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 23.06.2025 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

வில்லிவாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி விசு (எ) விஸ்வநாதன் என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி விசு (எ) விஸ்வநாதன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட உள்ளது.

# ஜேப்பியர் பொறியியல் கல்லூரியில் தமிழக அரசின் ஐடிஎன்டி மையத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து

**சென்னை ஆக 15-**

கல்வி மற்றும் புதுமைகளுக்குப் பெயர் பெற்ற ஜேப்பியர் பொறியியல் கல்லூரி தனது 25ஆவது வருடம் என்ற மகத்தான மைல்கல்லை எட்டியுள்ளது. இந்த நிகழ்வு பிரமாண்டம், தொலைநோக்கு மற்றும் எதிர்காலத்திற்கான திட்டமிடலுடன் நடந்தது. இந்த நிகழ்வில், கல்வித்துறையில் பெயர் பெற்ற நாட்டின் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் "கல்வித் துறையை மறுவடிவமைப்பு மற்றும் பேதுமைகளுக்கான திட்டமிடல்" என்ற தலைப்பில் நடைபெற்றது.

ஜேப்பியர் பல்கலைக்கழகத்தின் நிறுவனர் வேந்தரும் ஜேப்பியர் பொறியியல் கல்லூரியின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான டாக்டர் ரெஜினா ஜே முரளி நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு கூறுகையில், "பெண்கள் வளர்ச்சியில் ஆரோக்கியமான முறையில் ஆண்கள் ஊக்கமளிப்பதைப் பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக உள்ளது. இது பெண்களின் கல்வி வளர்ச்சிக்கும் உறுதுணையாக உள்ளது. இன்று, சுமார் 70 சதவீத மாணவர்கள் பெண்கள் என்பதை நீங்கள் அனைவரும் பார்த்திருப்பீர்கள். என் தந்தை கல்லூரியை நிறுவியபோது, 100 ஆண்கள் மாணவர்களாக இருந்தனர். பெண்களுக்கு ஒரு தனி பல்கலைக்கழகம் வேண்டும் என்பது அவரது கனவு. எங்களது தீவிர முயற்சியால அந்தக் கனவு விரைவில் நிறைவேறும் என உறுதியளிக்கிறோம்" என்றார்.

வேந்தர்கள், துணைவேந்தர்கள், ரெஜிஸ்ட்டர்ஸ், நிர்வாக அறங்காவலர்கள், முன்னணி பல்கலைக்கழகங்கள் மற்றும் பொறியியல் நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட நாற்பதுக்கும் மேற்பட்ட புகழ்பெற்ற கல்வித் தலைவர்கள், நாடு முழுவதிலுமிருந்து முப்பதுக்கும் மேற்பட்ட பிரபல தொழில்துறைத் தலைவர்கள் கலந்து கொண்ட இந்தத் தொடக்க நிகழ்வு வரலாற்று சிறப்புமிக்கதாக அமைந்து தமிழக கல்வித் துறையில் மதிப்புக்க தருணமாக மாறியது. அதாவது, ஜேப்பியர் பல்கலைக்கழகத்திற்கும் தமிழக அரசின் ஐடிஎன்டி மையத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் (ஐடிஎன்டி) அசோசியேட் வைஸ் பிரசிடெண்ட் டேனியல் பிரபாகரன் மற்றும் ஜேப்பியர் பொறியியல் கல்லூரியின் நிறுவனர் வேந்தரும், நிர்வாக இயக்குநருமான டாக்டர் ரெஜினா ஜே முரளி ஆகியோர் முறைப்படுத்தினர்.

# சென்னை ரிப்பன் மாளிகை முன் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தூய்மைப்பணியாளர்கள் கைது

**சென்னை ஆக 15-**

சென்னை ரிப்பன் மாளிகை முன் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தூய்மைப்பணியாளர்கள் இரவில் கைது செய்யப்பட்டுள்ளனர். பணி நிரந்தரம், தூய்மைப் பணியை தனியார் வசம் ஒப்படைக்கக் கூடாது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் தொடர்ந்து 13-வது நாளாக போராட்டம் நடத்திவருந்தனர்.

இந்தநிலையில் சென்னை ரிப்பன் மாளிகை முன்பு நடைபெறும் போராட்டத்தால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு தலைமை நீதிபதி எம். எம்.ஸ்ரீவத்சவா, நீதிபதி சுந்தர்மோகன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தூய்மை பணியாளர்களின் போராட்டத்தால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர், அருகில் மருத்துவானை உள்ளது என்ற தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

போராட்டத்தால் யாருக்கும் பாதிப்பில்லை என போராட்டக்காரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.இந்நிலையில், ரிப்பன் மாளிகைக்கு வெளியே போராடுவோரை அப்புறப்படுத்த தமிழக அரசுக்கு சென்னை சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது, இதனை அடுத்து தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் நடத்தில் போலீசார் குவிக்கப் பட்டு, தூய்மைபணியாளர்களுடன் அமைச்சர்கள் கே.என். நேரு, சேகர் பாபு, அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில் போராட்டம் தொடரும் என தூய்மைப்பணியாளர்கள் அறிவித்தனர்.இந்தநிலையில் உயர்நீதிமன்ற உத்தரவின்படி காவல் துறையினர் போராட்டம் நடத்திய தூய்மைப்பணியாளர்களை கைது செய்தனர். போராட்டம் செய்த தூய்மைப்பணியாளர்கள், ஆதரவு தெரிவித்தவர்கள் என 900 பேர் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் திருவான்மியூர், சைதாப்பேட்டை, அடையாறு, வேளச்சேரி சமுதாயக் கூடங்களில் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட போது தூய்மைப் பணியாளர்கள் 4 பேர் மயக்கமடைந்தனர். கஸ்தூரி(47), ஷாலினி(33), பானு(33), மங்கம்மா(54) ஆகியோர் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# சிறுமி துன்புறுத்தல் விவகாரம்: கேரள நடிகை மினுமுனீர் கைது

**சென்னை ஆக 15-**

சென்னையில் உள்ள விடுதியில் தங்கியிருந்தபோது 4 பேர் சிறுமி பலாத்காரம் செய்த விவகாரம் தொடர்பாக கேரள நடிகை மினுமுனீரை திருமங்கலம் போலீசார் கைது செய்துள்ளனர். திருமங்கலம் காவல்நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கேரள மாநிலம் பத்தினம்திட்டா மாவட்டத்தில் உள்ள திருவல்லா பகுதியை சேர்ந்தவர் மினு முனீர் என்கிற மினு குரியன்(52). இவர் கடந்த 2008ம் ஆண்டு கேரளாவில் சின்னத்திரை மூலம் அறிமுகமாகி திரைப்படத்தில் நடித்து வருகின்றார். இவர் தமிழிலும் ஒரு சில திரைப்படங்களில் நடித்துள்ளார். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு மினு முனீர் தனது உறவினர் மகளான 14 வயது சிறுமியை சினிமாவில் நடவடிக்கவைப்பதாக ஆசைவார்த்தை கூறியுள்ளார். பின்னர் அந்த சிறுமியை கேரளாவில் இருந்து சென்னைக்கு அழைத்து வந்து சென்னையில் உள்ள தனியார் விடுதியில் தங்கவைத்துள்ளார்.அப்போது அந்த சிறுமியிடம் 4 பேர் தவறாக நடந்துள்ளதாக தெரிகிறது.

இதனால் சிறுமி எப்படியோ அங்கிருந்து தப்பித்து கேரளாவுக்கு சென்றுவிட்டதாக தெரிகிறது. இந்தநிலையில்தான் கேரளா அரசு சார்பில், ஹேமா கமிட்டி ஒன்று உருவாக்கப்பட்டு திரைப்படத்துறையில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் பாலியல் தொடர்பான பிரச்னைகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வந்தது. இதில் பாதிக்கப்பட்ட அனைவரும் முன்வந்து புகார் கொடுத்தனர். இதுசம்பந்தமாக பாதிக்கப்பட்ட சிறுமியும் கடந்த 2024ம் ஆண்டு கேரளா காவல் துறையில் புகார் கொடுத்துள்ளார். சிறுமி பாதிக்கப்பட்டதாக கூறப்பட்ட பகுதி திருமங்கலம் என்பதால் இந்த வழக்கை கேரள போலீசார் திருமங்கலம் போலீசாருக்கு மாற்றினர். இதையடுத்து திருமங்கலம் அனைத்து மகளிர் போலீசார் விசாரணை நடத்தினர்.இதையடுத்து கடந்த மார்ச் மாதம் நடிகை மீனு முனீர் மீது போக்சோ வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்த நிலையில், நேற்று முன்தினம் திருமங்கலம் அனைத்து மகளிர் போலீசார் கேரளாவுக்கு சென்று நடிகை மினு முனீரை அதிரடியாக கைது செய்தனர். இதன்பின்னர் நடிகையை ரயில் மூலம் நேற்று காலை திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்துக்கு அழைத்துவந்தனர். அவரிடம் சிறுமி பாதிப்பு தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்''நடிகை மீனு முனீரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இதன்பின்னர் போக்சோ நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைக்கப்படுவார்' என்று திருமங்கலம் போலீசார் தெரிவித்துள்ளனர்.

# மணி எக்சேஞ்ச் நிறுவனத்தில் ரூ.1.50 லட்சம், லேப்டாப் திருடிய ஊழியர் கைது

**சென்னை ஆக 15-**

சூளைமேடு பகுதியில் கடன் தொல்லையால் மணி எக்சேஞ்ச் நிறுவனத்தில் ரூ.1.50 லட்சம் ரொக்கம், லேப்டாப் திருடிய ஊழியரை போலீசார் கைது செய்தனர். சென்னை சூளைமேடு பகுதியை சேர்ந்தவர் அப்துல் கரீம்(24). இவர் அதே பகுதியில் மணி எக்சேஞ்ச் நிறுவனம் நடத்தி வருகிறார். கடந்த 4ம் தேதி இரவு நிறுவனத்தை பூட்டிவிட்டு மறுநாள் காலையில் திறக்க வந்த போது, பூட்டு திறந்து கிடந்ததை பார்த்து உள்ளே சென்றார். அப்போது, அவரது கல்லாபெட்டியில் வைத்திருந்த ரூ.1.48 லட்சம் ரொக்கம் மற்றும் விலை உயர்ந்த லேப்டாப் மாயமாகி இருந்தது. இதுகுறித்து அப்துல் கரீம் சூளைமேடு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில், போலீசார் வழக்கு பதிந்து சிசிடிவி பதிவுகளை வைத்து விசாரணை நடத்தியபோது, அப்துல் நிறுவனத்தில் பணியாற்றி வரும் எம்.கே.பி.நகரை சேர்ந்த அவரது நண்பர் சரத்(22) பணம் மற்றும் லேப்டாப் ஆகியவற்றை திருடியது தெரியவந்தது. இதையடுத்து, போலீசார் சரத்தை பிடித்து விசாரித்தனர். அதில், கடன் தொல்லை காரணமாக பணம் மற்றும் லேப்டாப் திருடியதாக ஒப்புக்கொண்டார். அதைதொடர்ந்து போலீசார் சரத்தை கைது செய்தனர்.

# கொலை வழக்கில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவான குற்றவாளி கைது

**சென்னை ஆக 15-**

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில் நீதிமன்ற விசாரணை நிலுவை வழக்குகளில் அதிக முக்கியத்துவம் வழங்கி எதிரிகளுக்கு உரிய நீதிமன்ற தண்டனை பெற்று தந்து, பாதிக்கப்பட்டோருக்கு உரிய நீதி பெற்று தந்திட, 12 காவல் மாவட்டங்களிலும் துணை ஆணையர்களின் மேற்பார்வையில் உதவி ஆணையர்கள், காவல் ஆய்வாளர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை கண்காணித்து வழக்குகளில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவு குற்றவாளிகளை கைது செய்திட, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 05.01.2013 அன்று வியாசர்பாடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் காமேஷ் என்பவரை கொலை செய்தது தொடர்பாக, வியாசர்பாடி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி யுவராஜ் என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் நீதிமன்ற பிணையில் சென்ற யுவராஜ் அல்லிக்குளம் வளாகத்தில் உள்ள 21வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரி யுவராஜ் என்பவரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த கடந்த 16.07.2025 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. வியாசர்பாடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவு எதிரி யுவராஜ், என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி யுவராஜ் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு, நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**



**மதுரவாயல் தொகுதிக்கு உட்பட்ட 147 வது வார்டில் தாயுமானவர் திட்டமான வீடு தேடி ரேஷன் பொருள் வழங்கும் நிகழ்ச்சியினை மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் துவக்கி வைத்தார் உடன் லயன்.எஸ்.ஜி.மாதவன் பிருந்தாவனன், உதயம் வேணு, ஜீவானந்தம்,ஜெயக்குமார்,ரவிக்குமார், நாராயணன் உள்ளனர்.**



**சென்னைசைதாப்பேட்டைதொகுதி169வதுவார்டுக்குட்பட்ட சின்னமலை விநாயகர் கோவில் தெருவில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை துணை மேயர் மு.மகேஷ்குமார் தொடங்கி வைத்தார்.**

# எம்.கே.பி. நகரில் போதை பொருள் கடத்திய வாலிபர் கைது

**சென்னை ஆக 15-**

சென்னை பெருநகர காவல், போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படையினர் மற்றும் எம்.கே.பி. நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து, 12. ந் தேதி அன்று மதியம், வியாசர்பாடி, முல்லை நகர் சுடுகாடு அருகே கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி இருசக்கர வாகனத்தின் அருகில் நின்றிருந்த நபரை விசாரணை செய்து, அவரை சோதனை செய்த போது, அவர் மெத்தம்பெட்டமைன் என்ற போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது. அதன்பேரில், எம்.கே.பி. நகர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, போதைப்பொருள் வைத்திருந்த நவீன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 2.25 கிராம் மெத்தம்பெட்டமைன் மற்றும் இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி நவீன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகளை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

**கண், ரத்த தானம் செய்வீர்**

# திருவாரூர் மாவட்டத்தில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர், எம்.எல்.ஏ. வழங்கினர்



**திருவாரூர்,ஆக.15-**

திருவாரூர் மாவட்டத்தில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் முகாம்; நடைபெற்று வருவதை கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

திருவாரூர் மாவட்டத்தில், உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் அக்டோபர் மாதம் வரை நகர்புறப்பகுதிகளில் 54 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 131 முகாம்களும் என மொத்தம் 185 முகாம்கள் நடைபெறும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப்பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப்பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின்கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள், சேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்கியுள்ளனர்.

அதனடிப்படையில், அட்டவணைப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட நாட்களில் பொதுமக்கள் தொடர்புடைய முகாம்களில் கலந்து கொள்ளலாம்.

மேலும், இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருவாரூர் மாவட்டம், திருவாரூர் வட்டம், புலிவலம் ஊராட்சிக்குட்பட்ட தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் நேரில் பார்வையிட்டு, உங்களுடன் ஸ்டாலின் முகாமில் காலையில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி தீர்வு காணப்பட்டு வருவாய்துறையின் சார்பில் 18 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டையினையும், வேளாண்மை-உழவர் துறையின் சார்பில் 02 பயனாளிகளுக்கு வேளாண் இடுபொருட்களும், தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறையின் சார்பில் 04 பயனாளிகளுக்கு காய்கறி விதை தொகுப்பினையும் வழங்கினார்கள். கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பொதுமக்கள் விண்ணப்பம் அளிப்பதனை கலெக்டர் வ. மோகனச்சந்திரன், , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் நேரில் பார்வையிட்டு, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் யோகேஸ்வரன், மாவட்ட வழங்கல் அலுவலர் செல்லபாண்டி, கூத்தாநல்லூர் நகர்மன்றத்தலைவர் பாத்திமா பஷிரா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் அமுதா, கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையர் சியாமளா, வட்டாட்சியர்கள் ஸ்டாலின் (திருவாரூர்), வசுமதி (கூத்தாநல்லூர்) உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கம் நடைபெறவுள்ளது: கலெக்டர் ப.ஆகாஷ் தகவல்

**நாகப்பட்டினம்,ஆக.15-**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அனைத்து அரசுத் துறை வாரியங்கள், கழகங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் 28.08.2025 மற்றும் 29.08.2025 ஆகிய இரண்டு நாட்கள் மாவட்ட கலெக்டர் அலுவலக முதன்மை மாநாட்டுக் கூட்டரங்கத்தில் ஆட்சிமொழிப் பயிலரங்கம், ஆட்சிமொழிக் கருத்தரங்கம் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நடைபெறவுள்ளது.

28.08.2025 அன்று மாவட்ட வருவாய் அலுவலரின் பயிலரங்கத் தொடக்க உரையைத் தொடர்ந்து பயிலரங்கத்தில் 1. ஆட்சிமொழி வரலாறு சட்டம், 2. ஆட்சிமொழிச் செயலாக்கம் அரசாணைகள், 3. மொழிபெயர்ப்பு கலைச் சொல்லாக்கம், 4. அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், 5. மொழிப் பயிற்சி, 6. கணினித்தமிழ் ஆகிய ஆறு தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. 29.08.2025 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு கலெக்டர் தலைமையில் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் குறித்து அரசு அலுவலர்கள் கருத்துரை வழங்க உள்ளனர்.

அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசு அலுவலர்கள், பணியாளர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக நாகப்பட்டினம் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் சி.சுகன்யா செயல்படுவார் என மாவட்ட கலெக்டர் ப.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

**மழைநீர் உயிர்நீர்**

## இன்று 79-வது சுதந்திரதின விழா:

# தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பணியில் ஒரு லட்சம் போலீசார்

**சென்னை, ஆக. 15-**

**சுதந்திரதின விழாவையொட்டி தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீசார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டுள்ளனர்.;**

நமது நாட்டின் 79-வது சுதந்திரதின விழா இன்று (வெள்ளிக்கிழமை) நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. சென்னையில் கோட்டை கொத்தளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றிவைத்து சிறப்புரையாற்றுகிறார். நிகழ்ச்சியில் சில புதிய அறிவிப்புகளை வெளியிடும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்த ஆண்டுக்கான தகைசால் தமிழர் விருது உள்பட பல்வேறு விருதுகளை வழங்குவார்.

முன்னதாக கோட்டை முன்பு நடக்கும் பிரமாண்ட அணிவகுப்பையும் அவர் பார்வையிடுகிறார். இதற்காக கோட்டையில் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சுதந்திரதின விழாவையொட்டி தமிழகம் முழுவதும், பாதுகாப்புக்காக 1 லட்சம் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். சுதந்திரதின விழா நடைபெறும் சென்னை கோட்டை பகுதி 5 அடுக்கு பாதுகாப்பு வளையத்திற்குள் நேற்று இரவில் இருந்து கொண்டுவரப்படுகிறது.

சுதந்திர தின விழாவையொட்டி கோவையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. விமானநிலையத்தில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் மற்றும் ஆயுதப் படை போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். அங்கு 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. கோவை ரெயில் நிலையத்தில் வெடிகுண்டு நிபுணர்கள் உலோகக் கண்டறிவி கருவியுடன் அனைத்து பகுதிகளிலும் சோதனை நடத்தி வருகிறார்கள். பயணிகளின் பார்சல்கள் தீவிரமாக சோதனை நடத்தப்படுகிறது.

கோவை காந்திபுரம், சிங்காநல்லூர், உக்கடம், மேட்டுப்பாளையம் ரோடு பஸ் நிலையம், ஆம்னி பஸ்நிலையங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நகரம் முழுவதும் வாகன சோதனையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கோவை நகரில் போலீஸ் கமிஷனர் சரவணசுந்தர் தலைமையில் 2 ஆயிரம் போலீசாரும், மாவட்ட பகுதிகளில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு கார்த்திகேயன் தலைமையில் 1,000 போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## பீகாரில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் போது

# நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் பெயர்களை வெளியிடுங்கள்

## தேர்தல் ஆணையத்திற்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு

**புதுடெல்லி, ஆக. 15-**

**பீகார் மாநிலத்தில் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ள சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் விவரங்களை 3 நாட்களில் இணையதளத்தில் வெளியிட வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. மேலும் மாவட்ட வாரியாக எத்தனை பேர் நீக்கப்பட்டனர் என்பதை குறிப்பிட்டு பட்டியலை வெளியிட வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது.**



மக்களவை தேர்தலின் போது வாக்காளர் பட்டியலில் முறைகேடு செய்யப்பட்டு, வாக்கு திருட்டு நடைபெற்றதாக குற்றம்சாட்டிய ராகுல் காந்தி, கடந்த வாரம் அதற்கான ஆதாரங்களை வெளியிட்டார். ஆனால், இந்த குற்றச்சாட்டுகளை தலைமை தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது. இதனிடையே, பீகார் மாநிலத்தில் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ள சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இது தொடர்பான விசாரணை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதி ஜாய்மாலா பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று நடைபெற்றது.

அப்போது வாக்காளர் பட்டியலில் 65 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டது தொடர்பாக நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இடம்பெயர்ந்தவர்கள், இறந்தவர்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்தவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்ட நிலையில், அவ்வாறு நீக்கப்பட்டவர்களின் பெயர்களை இணையதளத்தில் வெளியிடலாமே? என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு வாக்காளர்களின் தனியுரிமை பாதுக்காக்கப்பட வேண்டும் எனவும், சில முடிவுகளை எடுக்க எங்களுக்கும் அதிகாரம் உள்ளது எனவும் தேர்தல் ஆணையம் தரப்பில் பதிலளிக்கப்பட்டது. இதையடுத்து நீதிபதிகள், வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் பெயர்களை 3 நாட்களில் இணையதளத்தில் வெளியிட வேண்டும் எனவும், நீக்கப்பட்ட காரணத்தை தெளிவாக குறிப்பிடுவதோடு, மாவட்ட வாரியாக எத்தனை பேர் நீக்கப்பட்டனர் என்பதையும் குறிப்பிட்டு பட்டியலை வெளியிட வேண்டும் எனவும் தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மாபெரும் தமிழ்க் கனவு என்னும் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சி

## கலெக்டர் மு.அருணா துவக்கி வைத்தார்



**புதுக்கோட்டை,ஆக.15-**

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், 'மாபெரும் தமிழ்க் கனவு" என்னும் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சியினை, கலெக்டர் மு.அருணா, , மாநிலத் திட்டக்குழு உறுப்பினர் 'பத்மஸ்ரீ" 'கலைமாமணி" டாக்டர்.நர்த்தகி நடராஜ் முன்னிலையில் (14.08.2025) துவக்கி வைத்து உரையாற்றினார்.

பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, மாபெரும் தமிழ் கனவு நிகழ்ச்சியானது தமிழகம் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, கல்லூரி மாணவர்களிடையே தமிழர்களின் மரபையும், தமிழ்ப் பெருமிதத்தையும் உணர்த்தும் வகையில் 'மாபெரும் தமிழ்க் கனவு" என்ற பெயரிலான பண்பாட்டுப் பரப்புரை நிகழ்வுகள் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளான 03.02.2023 அன்று தொடங்கப்பட்டு, 2022-23 மற்றும் 2023-24 கல்வியாண்டுகளில், தமிழ்நாடு முழுவதும் உள்ள 2,000 கல்லூரிகளைச் சேர்ந்த ஏறத்தாழ 2 லட்சம் மாணவர்களைச் சென்றடையும் வண்ணம் 200 இடங்களில் சிறப்பாக நடத்தப்பட்டன. உயர் கல்வித் துறையுடன், தமிழ் இணையக் கல்விக்கழகம் இணைந்து இந்நிகழ்ச்சியை நடத்தியது.

இதன் 100-வது நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் உரையாற்றுகையில் இந்நிகழ்வானது கல்லூரி மாணவர்களிடையே தமிழ் மரபு, தமிழர் தொன்மை, மொழி முதன்மை, சமூக விழிப்புணர்வு, சமத்துவ வளர்ச்சி குறித்த புரிதலை ஏற்படுத்தும் வகையிலும், அடுத்த கட்ட இலக்குகளை நோக்கிச் செல்லும் வகையிலும் அமைந்திருக்கிறது என்றும், எனவே கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் பயனடையும் வண்ணம் இந்நிகழ்ச்சி அடுத்து வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து நடத்தப்படும் எனவும் அறிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, அடுத்த கட்ட நிகழ்ச்சியானது தற்போது தொடங்கியுள்ளது. நமது தமிழ் மரபின் வளமையையும், பண்பாட்டின் செழுமையையும், சமூகச் சமத்துவத்தையும், பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகளையும், இளம் தலைமுறையினரிடையே குறிப்பாகக் கல்லூரி மாணவர்களிடையே கொண்டு செல்வதற்காக தமிழ்நாடு அரசு இந்தப் பரப்புரைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 200 கல்லூரிகளில் 'மாபெரும் தமிழ்க் கனவு" பரப்புரைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்நிகழ்வு நடக்கும் கல்லூரிகளுக்கு அருகிலுள்ள கல்லூரிகளிலிருந்தும் மாணவர்கள் பங்கு பெற்றுள்ளனர். இதன் மூலம் குறைந்தபட்சம் 2 லட்சம் மாணவர்களைச் சென்றடைவதே இத்திட்டத்தின் இலக்காகும். பல்வேறு தளங்களில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டின் 50-க்கும் மேற்பட்ட ஆளுமைகளைக் கொண்டு, 200 சொற்பொழிவுகளை நடத்திமுடிக்க செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் தமிழ்ப் பெருமிதங்களைப் பறைசாற்றும் வகையிலும், அதேநேரம் தாங்கள் புலமை பெற்ற துறை சார்ந்தும் ஆளுமைகள் பேருரை நிகழ்த்துகிறார்கள். தமிழ்நாட்டின் மிகச் சிறந்த ஆளுமைகள், பல்துறை நிபுணர்கள் ஆகியோரின் ஊக்கமிகு உரை மாணவர்களுக்கு உத்வேகம் அளிப்பதாகவும் அவர்களுக்குத் தமிழ் மரபின் பெருமிதத்தை உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது.எனவே, மாணாக்கர்கள் அனைவரும் தமிழக அரசால் மேற்கொள்ளப்படும் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரைகளை உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு தங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் கலெக்டர் மு.அருணா, தெரிவித்தார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# இந்திய எல்லைக்குள் அனுமதி இன்றி வந்ததாக இலங்கை அகதிகள் இருவர் கைது

## வேதாரண்யம் போலீசார் நடவடிக்கை

**வேதாரண்யம்,ஆக.15-**

இலங்கையிலிருந்து அகதியாக வந்த இருவர் படகு என்ஜின் பழுதானதால் 3 நாட்களாக தண்ணீர் உணவின்றி தவித்த நிலையில் வேதாரண்யம் கடற்பகுதியில் அனுமதி இன்றி வந்ததாக கூறி கடலோர காவல்குழும போலீசார் கைது செய்தனர்

இலங்கை யாழ்ப்பாணம் மாவட்டம் காங்கேசன்துறையை சேர்ந்த வினோத்குமார் சிந்துஜன் ஆகிய .இருவரும் கடந்த 8 தேதி காங்கேசன் துறையிலிருந்து புறப்பட்டு தமிழ்நாட்டுக்கு அகதியாக வந்துள்ளனர் வினோத்குமார் சிந்துஜன் ஆகியோர் வந்த படகு என்ஜின் பழுதடைந்ததால் வேதாரண்யம் கடற்பகுதியில் ஒரு கடல்மைல் தொலைவில் மேற்கொண்டு செலுத்தமுடியாமல் தவித்தனர் கடந்த 3 நாட்களாக தண்ணீர் உணவின்றி தவித்த இருவரையும் ஆறுகாட்டுத்துறை மீனவர்கள் மற்றோரு படகு மூலம் கரைக்கு காலையில் அழைத்து வந்தனர்

இது குறித்து தகவல் அறிந்த வேதாரண்யம் கடலோர காவல்குழும போலீசார் இலங்கையைச் சேர்ந்த வினோத்குமார் சிந்துஜன் இருவரையும் கைது செய்தனர் அனுமதி இன்றி இந்திய எல்லைக்குள் வந்த இவர்களை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

விசாரணையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ வழியின்றி தமிழ்நாட்டுக்கு அகதியாக வந்ததாகவும் இலங்கையைச் சேர்ந்த ராஜன் என்ற நபர் உதவியுடன் பைபர் படகில் தமிழகத்திற்கு வந்ததாகவும் வந்த படகு என்ஜின் பழுதடைந்ததால் கடந்த 3 நாட்களாக தண்ணீர் உணவின்றி தவித்ததாக தெரிவித்தனர்

இந்த நிலையில் வேதாரண்யம் பகுதியிலிருந்து கஞ்சா கடத்தி செல்ல வந்தவர்களா என போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர் இவர்கள் வந்த படகில் 15 எச்பி என்ஜின் ஒன்றும் ஆங்கர் 10 லிட்டர் பெட்ரோல் 10 லிட்டர் மண்ணெண்ணையும் இருந்ததை படகுடன் கைப்பற்றி போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்

**போக்குவரத்து விதிகளை மதிக்கவும்**



**தமிழ்நாடு துணை முதலமைச்சரிடம் தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் போதைப்பொருட்கள் எதிர்ப்பு மற்றும் தடுப்பு மன்றங்கள் ஆரம்பித்து சிறப்பாக செயல்படுத்தியமைக்காக மாநில அளவில் முதலிடம் பெற்ற விருது மற்றும் முதல் பரிசுத்தொகைக்கான காசோலையினை தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் காண்பித்து வாழ்த்து பெற்றார்கள். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.ராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் . மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் (பொ) இ.மாதவன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.**

# திருச்சி அண்ணா விளையாட்டரங்க வளாகத்தில் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பாரா விளையாட்டு அரங்கம்

## கலெக்டர் வே.சரவணன் குத்துவிளக்கேற்றி வைத்தார



**திருச்சி,ஆக.15-**

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் பாரா விளையாட்டு வீரர்களை உருவாக்கும் வகையில் பாரா-விளையாட்டு அரங்கம், அரை வட்ட திறந்த வெளி மேற்கூரை கொண்ட பாரா இறகுப்பந்து, உட்கார்ந்து விளையாடும் பாரா கையுந்து பந்து. பாரா டேபிள் டென்னிஸ். பாரா போச்சியா (மூஉஉயை). பாரா டேக்வொண்டோ. ஜூடோ ஆடுகளம், பாரா கோல்பால் (புழயட டியடட) விளையாட்டுகளுக்கான பன்னோக்கு உள்விளையாட்டரங்கம், பாரா பளு தூக்குதல் அடங்கிய உடற்பயிற்சிக்கூடம், சக்கர நாற்காலிகளுடன் அணுகும் வகையிலான சாய்வுதளம் கொண்ட ஆண், பெண் இருபாலருக்கான கழிப்பறைகள் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டு உள்ளது. அதன் அடிப்படையில் (14.08.2025) திருச்சிராப்பள்ளி அண்ணா விளையாட்டரங்க வளாகத்தில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பாரா விளையாட்டு அரங்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி அண்ணா விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற விழாவில் கலெக்டர் வே.சரவணன், பங்கேற்று குத்துவிளக்கேற்றி வைத்து, அரங்கம் மற்றும் உடற்பயிற்சி கூடத்தை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் அருள், மண்டல முதுநிலை மேலாளர் செந்தில்குமார், மாவட்ட விளையாட்டு அலுவலர் ஞான சுகந்தி,; விளையாட்டு விடுதியின் மேலாளர் கண்ணன், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

தமிழ்நாடு அரசு
எரியோடு பேரூராட்சி
திண்டுக்கல் மாவட்டம்

ந.க.எண்: 92/2025 குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 05.8.2025

திண்டுக்கல் மாவட்டம், எரியோடு பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் 2025-26ன் கீழ் கீழ்கண்ட பணியினை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two Cover System) கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் எரியோடு பேரூராட்சியின் செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் 20.08.2025 புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை இணையதள வழியாக பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி 20.08.2025ல் நடைபெறும். தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் 20.08.2025 பிற்பகல் 3.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பரிசீலிக்கப்படும்.

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் 2025–26

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | செலுத்த வேண்டிய தொகை முன்வைப்புத்தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1. | Construction of Community Hall (G+1) in (Pannaipatti) ward No.9, SF No.1156/2, 1156/3 part. | 143.00 | 1,43,000 | Class - I | 9 மாதம் |

1. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை எரியோடு பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 20.08.2025 ஆம் தேதி மாலை 3.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/4421/ஒப்பந்தப்புள்ளி/2025

செயல் அலுவலர், எரியோடு பேரூராட்சி.
திண்டுக்கல் மாவட்டம்.

# சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுனுக்கு நிச்சயதார்த்தம்



**மும்பை, ஆக். 15-**

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் மகனும் கிரிக்கெட் வீரருமான அர்ஜுன் டெண்டுல்கருக்கு தொழிலதிபர் மகளுடன் நிச்சயதார்த்தம் நடைபெற்றுள்ளது.

**கோவா அணிக்காக...**

25 வயதாகும் அர்ஜுன் டெண்டுல்கர், ஐபிஎல் தொடரில் 2021 முதல் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். ஆனால், 5 முறை மட்டுமே இவருக்கு விளையாட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், முதல் தரப் போட்டியில் கோவா அணிக்காக 2022ஆம் ஆண்டு அறிமுகமான அர்ஜுன் டெண்டுல்கர், முதல் போட்டியிலேயே சதம் அடித்து சாதனை படைத்தார்.

**திடீர் நிச்சயதார்த்தம்...**

இந்த நிலையில், அர்ஜுன் டெண்டுல்கருக்கும் மும்பையைச் சேர்ந்த தொழிலதிபரின் மகளான சானியா சந்தோக்கிற்கும் நிச்சயதார்த்தம் நடந்து முடிந்துள்ளது. மிகவும் நெருங்கிய நண்பர்களும் உறவினர்களும் மட்டுமே கலந்துகொண்ட நிகழ்வாக நடைபெற்றுள்ளது.

**சானியா சந்தோக்?**

மும்பையைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் ரவி காய் என்பவரின் பேத்திதான் சானியா சந்தோக். கிராவிஸ் குழுமத்தின் தலைவராக உள்ள ரவி காய், தி புரூக்ளின் க்ரீமரி மற்றும் பாஸ்கின் ராபின் ஆகிய பிரபல ஐஸ்கிரீம் நிறுவனங்களுக்குச் சொந்தக்காரர். இவரின் தந்தைதான் குவாலிட்டி ஐஸ்கிரீம் பிராண்டின் நிறுவனர். லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் பட்டம் பெற்ற சானியா, கால்நடை தொழில்நுட்பத்தில் டிப்ளோமா படித்துள்ளார். மும்பையில் உள்ள பாவ்ஸ் பெட் ஸ்பா அண்ட் ஸ்டோர் நிறுவனத்தின் இயக்குநராக உள்ளார்.

## வரும் 17-ம் தேதி முதல்
# பீகாரில் ராகுல் நடைபயணம்

**பீகார், ஆக. 15-**

தேர்தல் ஆணையம் பாஜகவுடன் இணைந்து சட்டமன்றம் மற்றும் மக்களவை தேர்தலில் வாக்கு திருட்டில் ஈடுபட்டதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுகள் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன.

கடந்த திங்கள்கிழமை, பாராளுமன்றத்தில் இருந்து தேர்தல் ஆணையம் நோக்கி பேரணி நடத்திய ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட சுமார் 250 எம்பிக்கள் பாதி வழியில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். இந்நிலையில் 'வாக்கு திருட்டு' தொடர்பாக வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் வரும் 17-ம் தேதி முதல் 15 நாட்களுக்கு பீகாரில் ராகுல் காந்தி நடைபயணம் மேற்கொள்ள உள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும் சத்தீஸ்கர் முன்னாள் முதல்வருமான பூபேஷ் பெகல் இதை உறுதிப்படுத்தி உள்ளார். பீகார் தலைநகர் பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் வரும் செப்டம்பர் 1-ம் தேதி வரை பேரணி நடைபெற உள்ளது. இதில், இண்டியா கூட்டணி தலைவர்கள் அனைவரும் பங்கேற்க இருக்கிறார்கள் என்று அவர் தெரிவித்தார்.

சட்டமன்றத் தேர்தல் நெருங்கும் பீகாரின் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொண்டு 65 லட்சம் வாக்காளர்களை தேர்தல் ஆணையம் வரைவு பட்டியலில் இருந்து நீக்கியுள்ள நிலையில் இந்த நடைபயணம் முக்கியத்துவம் பெறுகிறது.



**முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச்செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் புதுக்கோட்டை, திருப்பத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 9 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கங்கள்-3, தென்காசி மாவட்டத்தில் 15 கோடி ரூபாய் செலவில் பல்வேறு விளையாட்டு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம், சென்னை, திருச்சி, மதுரை, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 பாரா-விளையாட்டு மைதானங்கள், கோவில்பட்டியில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஹாக்கி விளையாட்டு மாணவர்களுக்கான முதன்மை நிலை மையம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டனர்.**

# ரூ. 37.38 கோடியில் விளையாட்டு அரங்கங்கள், புதிய மைதானங்கள்
## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, ஆக. 15-**

ரூ.37.38 கோடி செலவில் விளையாட்டு அரங்கங்கள், மைதானங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

ரூ.37.38 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் சிறு விளையாட்டு அரங்கங்கள்-3, பாரா-விளையாட்டு மைதானங்கள்-5, தென்காசி மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் மாணவர்களுக்கான ஆக்கி விளையாட்டு முதன்மை நிலை மையம் ஆகியவற்றை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் புதுக்கோட்டை, திருப்பத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 9 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் சிறு விளையாட்டு அரங்கங்கள்-3, தென்காசி மாவட்டத்தில் 15 கோடி ரூபாய் செலவில் பல்வேறு விளையாட்டு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம், சென்னை, திருச்சி, மதுரை, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 பாரா-விளையாட்டு மைதானங்கள், கோவில்பட்டியில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில், திருவரங்குளம் கிராமத்தில் 6.42 ஏக்கர் பரப்பளவில், 400 மீட்டர் தடகள பாதை (மண்), கால்பந்து மைதானம், கையுந்து பந்து ஆடுகளம், நீளம் தாண்டுதல் பகுதி, பார்வையாளர்களுக்கான இருக்கைகளுடன் கூடிய அரங்கம், உடற்பயிற்சி கூடம், உடை மாற்றும் அறை, நிர்வாக அலுவலகக் கட்டடம், கழிப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் நுழைவு வாயில் ஆகியவற்றுடன் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் சிறு விளையாட்டு அரங்கம் என மொத்தம் 37 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 3 முதல்வர் சிறு விளையாட்டு அரங்கங்கள், 5 பாரா-விளையாட்டு மைதானங்கள், தென்காசி மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் மாணவர்களுக்கான ஹாக்கி விளையாட்டு முதன்மை நிலை மையம் ஆகியவற்றை தமிழ்நாடு முதல்வர் திறந்து வைத்தார்.

## புரோ கபடி லீக் தொடர்:
# தமிழ் தலைவாஸ் அணியின் கேப்டனாக பவன் நியமனம்

**சென்னை, ஆக. 15-**

புரோ கபடி லீக் தொடரின் தமிழ் தலைவாஸ் அணியின் கேப்டனாக பவன் ஷெராவத் நியமனமிக்கப்பட்டுள்ளார்.

**வரும் 29ம் தேதி....**

நடப்பு சாம்பியன் அரியானா ஸ்டீலர்ஸ், புனேரி பால்டன்ஸ், ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ், தபாங் டெல்லி, பெங்கால் வாரியர்ஸ், பெங்களூரு புல்ஸ், பாட்னா பைரட்ஸ், யு மும்பா, உ.பி. யோத்தாஸ், தெலுங்கு டைட்டன்ஸ், தமிழ் தலைவாஸ், குஜராத் ஜெயன்ட்ஸ் ஆகிய அணிகள் பங்கேற்கும் 12-வது புரோ கபடி லீக் போட்டி விசாகப்பட்டினத்தில் உள்ள ராஜீவ் காந்தி உள்விளையாட்டு அரங்கில் வருகிற 29-ந் தேதி தொடங்குகிறது.

**புதிய வீரர்களை....**

இதன் லீக் ஆட்டங்கள் முறையே விசாகப்பட்டினம் (ஆக.29-செப்.11), ஜெய்ப்பூர் (செப்.12-27), சென்னை (செப்.29-அக்.12), டெல்லி (அக்.13-22) ஆகிய இடங்களில் நடைபெறுகிறது. தொடக்க நாளன்று இரவு நடைபெறும் முதலாவது லீக் ஆட்டத்தில் தெலுங்கு டைட்டன்ஸ்-தமிழ் தலைவாஸ் அணிகள் மோதுகின்றன. இந்த சீசனுக்கான வீரர்கள் ஏலம் மும்பையில் கடந்த மே 31 மற்றும் ஜூன் 1-ந் தேதி நடந்தது. இதில் ஒவ்வொரு அணிகளும் தக்க வைத்த வீரர்கள் போக தங்களது வியூகத்துக்கு தேவையான புதிய வீரர்களை வாங்கின. அத்துடன் ஒவ்வொரு அணியும் கோப்பையை கையில் ஏந்தும் நோக்குடன் கடந்த மாதம் முதல் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

**அறிமுக நிகழ்ச்சி....**

இந்த நிலையில் தமிழ் தலைவாஸ் அணியின் கேப்டன் மற்றும் சீருடை அறிமுக நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. இதில் தமிழ் தலைவாஸ் அணி வீரர்கள் அனைவரும் பங்கேற்றனர். அணியின் புதிய கேப்டனாக பவன் ஷெராவத்தும், துணை கேப்டனாக முன்னணி ரைடர் அர்ஜூன் தேஷ்வாலும் அறிவிக்கப்பட்டனர். அவர்களை அந்த அணியின் தலைமை பயிற்சியாளர் சஞ்சீவ் பால்யன், உதவி பயிற்சியாளர் சுரேஷ் குமார் ஆகியோர் அறிமுகம் செய்து வைத்தனர். அத்துடன் புதிய சீருடையும் அறிமுகம் செய்யப்பட்டது.

**நட்சத்திர வீரர்கள்...**

போட்டி குறித்து பவன் ஷெராவத் கூறுகையில், 'நான் சென்னை ரசிகர்கள் முன்னிலையில் விளையாடுவதற்கு மிகவும் ஆர்வமாக உள்ளேன். இங்கு நிறைய பேர் கபடியை விரும்புகிறார்கள். தீவிரமான ரசிகர்களான அவர்கள் முடிவை பற்றி பொருட்படுத்தாமல் ஆட்டத்தை அதிகம் ரசிக்கக்கூடியவர்கள். எங்கள் அணியின் கலவை மிகவும் சிறப்பாக இருக்கிறது. அனுபவம் வாய்ந்த வீரர்கள் மற்றும் இளம் நட்சத்திர வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். இது போன்று அணி அமைவது அரிதானதாகும். நாங்கள் போட்டிக்கு தயாராக இருக்கிறோம்' என்றார்.

# ஆதாரை அடையாள ஆவணமாக தேர்தல் ஆணையம் ஏற்க வேண்டும்
## சுப்ரீம் கோர்ட் புதிய உத்தரவு

**புதுடெல்லி, ஆக. 15-**

ஆதாரை அடையாள ஆவணமாக தேர்தல் ஆணையம் ஏற்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

பீகாரில் சட்டமன்றத் தேர்தல் வர உள்ள நிலையில் தேர்தல் ஆணையம் சர்ச்சைக்குரிய வகையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொண்டது. கடந்த ஆகஸ்ட் 1 இல் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் அனைவரும் உயிரிழந்தவர்கள், புலம்பெயர்ந்தவர்கள், சட்டவிரோத குடியேறிகள் என ஆணையம் தெரிவித்தது. இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் எதிர்க்கட்சிகள் மற்றும் ஜனநாயக சீர்திருத்த சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் வழக்கு தொடர்ந்தன.

இந்த வார தொடங்கில் இந்த வழக்கில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்த தேர்தல் ஆணையம், சட்டப்படி, நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் விவரங்களை மனுதாரர்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்திருந்தது. இந்நிலையில் இந்த வழக்கு இன்று நீதிபதிகள் சூர்ய காந்த், ஜாய்மாலா ஆகியோர் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, பீகார் வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் விவரங்களை தேர்தல் ஆணையம் அதன் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஆகஸ்ட் 19 ஆம் தேதிக்குள் வெளியிட நீதிபதிகள் அதிரடி உத்தரவு பிறப்பித்தனர்.

மேலும் இதுதொடர்பான அறிக்கையை 22 ஆம் தேதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தினர். மக்கள் தெளிவு பெறவும், திருத்தங்களுக்கு விண்ணப்பிக்க ஏதுவாகவும் நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் விவரங்கள் குறித்த வெளிப்படைத்தன்மை தேவை என நீதிபதிகள் தெரிவித்தனர். மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தத்தில், ஆதார் அட்டையையும், EPIC நம்பர்களையும் அடையாள ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனத் தேர்தல் ஆணையத்திற்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.

முன்னதாக ஆதார் அட்டை, குடியுரிமை ஆவணமாக கருதப்படாது என தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்த நிலையில் இந்த உத்தரவு வந்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் பணிகள் வாக்காளர்களுக்கு வசதியாகவும், சிரமத்தை ஏற்படுத்தாத வகையிலும் இருக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் அறிவுரை வழங்கியது.



**வேலூர் மாவட்டத்தில் நேற்று சுற்றுப்பயணம் மேற்கொண்ட அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு, அ.தி.மு.க. தொண்டர்கள், பொதுமக்கள் மற்றும் கூட்டணிக் கட்சியினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர். பிரச்சாரத்தின் போது அவருக்கு வெள்ளி வேல் வழங்கப்பட்டது. அருகில் முன்னாள் அமைச்சர் வீரமணி உள்ளார்.**

## வரலாற்றில் இடம்பிடித்த நாள்:
# 17 வயதில் சச்சின் முதல் டெஸ்ட் சதம்

**மும்பை, ஆக. 15-**

17 வயதில் நேற்று இதே நாளில் சச்சின் முதல் டெஸ்ட் சதம் அடித்து விளாசினார்.

**ஓல்ட் டிராபர்டில்...**

மாஸ்டர் பிளாஸ்டர், லிட்டில் மாஸ்டர், லெஜண்ட், ஜீனியஸ் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டு விதந்தோதப்பட்ட உலக கிரிக்கெட் ரசிகர்களின் ஏகோபித்த லட்சிய கிரிக்கெட் ஆளுமையான சச்சின் டெண்டுல்கர் தனது முதல் சதத்தை ஓல்ட் டிராபர்டில் அடித்த நாள் இதுதான். 1990-ம் ஆண்டில் இதே நாளில் (நேற்று - ஆக.14) தனது 17 வயதில் சச்சின் டெண்டுல்கர் தன் முதல் டெஸ்ட் சதத்தை எடுத்து இந்திய அணியை தோல்வியிலிருந்து மீட்டு டெஸ்ட் போட்டியை டிரா செய்தார்.

**பாக்.கிற்கு எதிராக....**

பாகிஸ்தானில் 1989-ம் ஆண்டு கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் தலைமையில் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமான சச்சின் டெண்டுல்கர் தனது அறிமுக இன்னிங்சில் 15 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்த இன்னிங்சில் வக்கார் யூனிஸ் பவுன்சரில் மூக்கில் அடிபட்டு பிளாஸ்திரி போட்டுக் கொண்டு வந்து இரண்டு ஸ்ட்ரெய்ட் ட்ரைவ் பவுண்டரிகளை அடித்தவர்.

தோல்வியுறாமல் டிரா....

அந்த பாகிஸ்தான் தொடரிலேயே பைசலாபாத்தில் 2-வது டெஸ்ட்டில் 59 ரன்கள் எடுத்து அசத்தினார். லாகூரில் 41 ரன்களையும், சியால் கோட் டெஸ்ட்டில் முதல் இன்னிங்சில் 35 ரன்களையும், 2-வது இன்னிங்சில் 57 ரன்களையும் எடுத்து கடினமான அந்தத் தொடரில் இந்தியா தோல்வியுறாமல் டிரா செய்து விட்டு வந்தனர். அந்தத் தொடரிலிருந்து சச்சின் டெண்டுல்கர் என்ற பெயர் வளரும் நாயகன், வளரும் நட்சத்திரம் என்று ஊடக உலகில் வளைய வரத் தொடங்கியது.



**ரசிகர்கள் ஆர்வம்....**

பிறகு நியூஸிலாந்து தொடரில் நேப்பியரில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் போட்டியில் 88 ரன்களை எடுத்தார் சச்சின், சதம் அடிப்பார் என்று ஆவலாக எதிர்பார்த்த தருணத்தில் டேனி மாரிசன் பந்தில் பின்னாளைய இந்தியப் பயிற்சியாளர் ஜான் ரைட் கேட்ச் எடுக்க ஆட்டமிழந்தார். அது அவருக்கே பெருத்த ஏமாற்றமளித்தது. இந்நிலையில்தான் 1990-ல் இங்கிலாந்துக்கு இந்திய அணி சென்றபோது லார்ட்ஸ் டெஸ்ட்டில் 10,27 எடுத்து 2-வது டெஸ்ட்டிற்கு இந்திய அணி ஓல்ட்டிராபர்டுக்கு வருகிறது. இந்தத் தொடரில் பெரிய கவர்ச்சியே சச்சின் டெண்டுல்கர்தான். சச்சின் டெண்டுல்கர் என்னும் 17 வயது சிறுவனின் ஆட்டத்தைப் பார்க்க இந்திய, பாகிஸ்தானிய, இங்கிலாந்து ரசிகர்கள் பெரிதும் ஆர்வம் காட்டிய தொடர்.

**இரண்டரைமணிநேரம்....**

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து கூச் (116), மைக் ஆர்த்தர்டன் (131), ராபின் ஸ்மித் (121) சதங்களுடன் 519 ரன்கள் குவித்தது. இந்திய அணி தன் முதல் இன்னிங்ஸில் சஞ்சய் மஞ்சுரேக்கர் (93), அசாருதீன் (179), எடுக்க, சச்சின் டெண்டுல்கர் 68 ரன்களை எடுக்க, இந்திய அணி 432 ரன்களை எடுத்தது. 2-வது இன்னிங்சில் ஆலன் லாம்ப் 109 ரன்கள் எடுக்க இங்கிலாந்து 320/4 என்று டிக்ளேர் செய்தது. இந்தியாவுக்கு வெற்றி இலக்கு 408 ரன்கள். இலக்கை விரட்டும் போது இந்திய அணி 127/5 என்றும், பிறகு கபில்தேவ் 26 ரன்களில் அவுட் ஆனபோது 183/6 என்றும் தோல்வி முகம் காட்டிய போது சச்சின் டெண்டுல்கரும் மனோஜ் பிரபாகரும் கடைசி இரண்டரை மணி நேரம் தாக்குப் பிடித்து 160 ரன்களைச் சேர்த்தனர்.

ஆஸ்திரேலியாவில்...

பிரபாகர் 67 ரன்களை எடுக்க, சச்சின் டெண்டுல்கர் 119 ரன்களை 17 பவுண்டரிகளுடன் விளாசினார் இருவருமே நாட் அவுட் ஆக இந்திய அணி 343/6 என்று ஆட்டம் முடிந்தது. டிரா ஆனது. ஒருவேளை இங்கிலாந்து முதல் நாளே டிக்ளேர் செய்திருந்தால் இந்திய அணியை சச்சின் வெற்றி பெறக்கூடச் செய்திருக்கலாம். ஏனெனில் 65 ரன்கள்தான் தேவை என்ற நிலை. அன்று தன் முதல் சதத்தை அடித்தவர்தான் சச்சின் டெண்டுல்கர். அதன் பிறகு ஆஸ்திரேலியாவில் சிட்னியில் 147, அதிவேக பவுன்ஸ் பிட்சில் 114 என்று வெளுத்து வாங்கிய பிறகே முதல் 15 டெஸ்ட் போட்டிகள் கடினமான பிட்ச்களில் வெளிநாட்டில் ஆடி விட்டுத்தான் இந்தியாவிலேயே அவர் சர்வதேச கிரிக்கெட்டில் முதல் டெஸ்ட்டை ஆடினார் என்பதும் சத சதங்கள் எடுத்த சதநாயகன் ஆக நேற்று வரலாற்றில் இடம்பிடித்த நாள்

# வார்னருக்கு ஜோ ரூட் பதிலடி



ஆஷஸ் தொடருக்காக டேவிட் வார்னரின் விமர்சனத்துக்கு ஜோ ரூட் "இதெல்லம் புதியதா என்ன? இன்னும் 100 நாள்கள் இருக்கிறது" எனக் கூறியுள்ளார். இங்கிலாந்தும் ஆஸ்திரேலியாவும் மோதும் ஆஷஸ் தொடர் இந்தாண்டு நவ.21-இல் பெர்த் திடலில் மோதுகிறது. டெஸ்ட்டில் 13,000 ரன்களை கடந்த ஜோ ரூட் ஆஸ்திரேலியாவில் ஒரு சதம்கூட அடித்ததில்லை என்ற புள்ளி விவரம் அதிர்ச்சி அளிக்கிறது. சமீபத்தில் டேவிட் வார்னர், "ரூட்டுக்கு எதிராக ஹேசில்வுட் அதிக விக்கெட்டுகளை எடுத்துள்ளார். அதனால், ரூட் தனது முன்னங்காலில் இருக்கும் அலைச்சறுக்குப் பலகையை எடுக்க வேண்டும்" எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில், இதற்குப் பதிலளித்த ஜோ ரூட் பேசியதாவது: சிலர் போட்டியை எப்படி பார்க்கிறார்கள், நேர்காணலில் எப்படி பேசுகிறார்கள் எனத் தெரியாது. எதுவும் புதியதில்லை. தலைப்புச் செய்திகளை உருவாக்கி இதை பெரிய தொடராக்க முயற்சிக்கிறார்கள். இது எதையுமே மாற்றாது. கடைசி சில தொடர்களில் பலவிதங்களில் கவனச்சிதறல்கள் ஏற்படுகின்றன. இந்தமுறை தொடரை மகிழ்ச்சியுடன் விளையாட இருக்கிறேன். ஆஸி. அழகான நாடு. கிரிக்கெட் விளையாட உகந்தது. 150 டெஸ்ட் போட்டிகளை விளையாடிவிட்டுச் செல்கிறேன். இன்னும் 100 நாள்கள் இருக்கையில் நான் மிகவும் தயாராக இருக்கிறேன் என்றார்.

# தமிழக வீரருக்கு புதிய அந்தஸ்து

அல்மைட்டி மாஸ்டர்ஸ் கினாவ் கோப்பை செஸ் போட்டி கஜகஸ்தானில் நடந்தது. இதில் 9-வது மற்றும் கடைசி சுற்றில் இந்திய வீரர் ரோகித் கிருஷ்ணா, அர்மேனியாவின் ஆர்தர் டேவிட்யானை வீழ்த்தியதன் மூலம் எலோ தரவரிசை புள்ளியில் 2500-ஐ கடந்து கிராண்ட்மாஸ்டர் அந்தஸ்தை எட்டினார். சென்னையில் என்ஜினீயரிங் கல்லூரியில் படித்து வரும் 20 வயதான ரோகித் கிருஷ்ணா இந்தியாவின் 89-வது கிராண்ட்மாஸ்டர் ஆவார்.

# வருகிற 25-ம் தேதி தொடங்குகிறது உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்

உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் தொடர் வருகிற 25-ந்தேதி தொடங்குகிறது.

உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி வருகிற 25-ந்தேதி பாரீசில் தொடங்குகிறது. இதற்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டது. இதன்படி இந்திய இளம் வீரர் லக்ஷயா சென்னுக்கு முதல் சுற்றே கடினமாக அமைந்துள்ளது. அவர் முதல் சுற்றில் உலகின் 'நம்பர் ஒன்' வீரர் ஷி யு கியை (சீனா) சந்திக்க வேண்டி உள்ளது. முன்னாள் சாம்பியனான இந்திய வீராங்கனை பி.வி. சிந்துவுக்கு முதல் சுற்று எளிதாக கிடைத்துள்ளது. அவர் 66-ம் நிலை வீராங்கனை கலோயனா நல்பன்டோவாவை (பல்கேரியா) சந்திக்கிறார். வருகிற 25-ம் தேதி தொடங்குகிறது.

## இன்னும் 6 நாட்கள் மட்டுமே உள்ளது:
# த.வெ.க. மாநாடு பணிகள் மும்முரம்

**மதுரை, ஆக. 15-**

த.வெ.க. மாநாட்டிற்கு இன்னும் 6 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 8 மாதங்களே உள்ள சூழ்நிலையில் முதன் முறையாக தேர்தலை சந்திக்க தமிழக வெற்றிக் கழகம் தயாராகி வருகிறது. அந்த வகையில் வரும் 25-ந் தேதி மதுரை-தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை பாரபத்தி பகுதியில் 2-வது மாநில மாநாடு நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில், விநாயகர் சதுர்த்தி விழா பாதுகாப்பு காரணங்களுக்காக காவல்துறை கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மாநாடு 4 நாட்களுக்கு முன்னதாக 21-ந் தேதி நடைபெறும் என்று த.வெ.க. தலைவர் விஜய் அறிவித்தார்.

த.வெ.க. மாநாட்டிற்கு இன்னும் 6 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. 500 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவில் மாநாடு நடைபெறுவதற்காக சுத்தம் செய்யப்பட்ட இடத்தில் பிரம்மாண்ட விழா மேடை, விஜய் தனது ரசிகர்களையும் தொண்டர்களையும் நடந்து சென்று சந்திப்பதற்கான 'ரேம்ப் வாக்' நடைமேடை மற்றும் பொது மக்கள் அமர்ந்து பார்க்கும் இடத்தில் தடுப்பு வேலி அமைக்கும் பணிகள் பணி நிறைவு பெற்றுள்ளது.

ஒலி, ஒளி கருவிகள் பொருத்துவதற்கான கேலரிகள், மின்விளக்குகள் சில இடங்களில் பொருத்தப்பட்டு அதற்கான மின் இணைப்புகளும் கொடுக்கப்பட்டு வருகிறது. மாநாட்டின் பிரமாண்ட முகப்பு ஆர்ச் பணிகள் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோல மூன்று இடங்களில் மாநாட்டிற்கு வரும் தொண்டர்களின் வாகனங்களை நிறுத்துவதற்காக பார்க்கிங் வசதி இடம் தயார் செய்யப்பட்டு வருகிறது.

மாநாட்டு திடலில் ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்டோர் அமர்வதற்கு இருக்கைகள் போடப்பட இருக்கிறது. மற்ற மாநாடுகளை விட இந்த மாநாட்டில் பங்கேற்கும் தொண்டர்களின் தண்ணீர் தாகம் தீர்க்கும் விதமாக சுத்திகரிக்கட்ட குடிநீர் வினியோகம் 24 மணி நேரமும் செயல்படுத்த முடிவு செய்ததை தொடர்ந்து நிலத்திற்கு அடியில் பத்தாயிரம் அடிக்கு பைப்புகள் பொருத்தப்பட்டு உள்ளது.

1000-க்கும் மேற்பட்ட குழாய்கள் அமைக்கப்பட்டு காலை முதல் மாலை வரை தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் வழங்குவதற்கு புதிய திட்டம் மேற்கொள்ளப்பட்டு அந்தப் பணிகளும் கிட்டத்தட்ட முழுமையாக நிறைவு பெற்றுள்ளது. ஓரிரு நாட்களில் பணிகள் முழுமையாக நிறைவடையும் நிலையில் பின்னர் குழாய் மூலம் திறந்து விடப்பட்டு தண்ணீர் முறையாக செல்கிறதா என்கிற சோதனை நடத்தப்பட உள்ளதாகவும் கட்சி மாநாடு ஏற்பாடு பொறுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் ஒரு லாரிக்கு 40 ஆயிரம் லிட்டர் வீதம் 40 சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தண்ணீர் லாரிகள் மாநாட்டுத் திடலில் நிறுத்தப்பட்டு தண்ணீர் வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யவும் திட்டமிட்டுள்ளனர்.

தென் மாவட்டங்களில் விஜய் பலத்தை நிரூபிக்க நடத்தப்படும் த.வெ.க. 2-வது மாநில மாநாடு அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. மாநாட்டிற்கு இன்னும் 6 நாட்களே உள்ளதால் மாநாடு முன்னேற்பாடு பணிகள் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது மாநாட்டு திடல் முழுவதும் த.வெ.க. கொடிகள் கட்டப்பட்டு பட்டொளி வீசி பறப்பது அந்த வழியாக செல்வோரை வெகுவாக ஈர்த்து வருகிறது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

## ராமநாதபுரத்தில் மாவட்ட அளவிலான உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சி



**ராமநாதபுரம், ஆக. 15-**

ராமநாதபுரத்தில் வேளாண்மை உழவர் நலத் துறை சார்பில் மாவட்ட அளவிலான உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சி நடைபெற்றது.

ராமநாதபுரத்தில் வேளாண்மை- உழவர் நலத் துறை மூலம் மாவட்ட அளவிலான உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சி பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் பாஸ்கரமணியன் முன்; னிலை வகித்தார். நிகழ்ச்சியில் விவசாயிகள் பயன்பெறும் வகையிலான வேளாண்மைத்துறையின் மூலம் வேளாண் பயன்பாடுகள் குறித்த கண்காட்சி அரங்கை பார்வையிட்டு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகள் வேளாண்மையில் சாதனை படைத்திட வேண்டும் என்ற நோக்குடன் தனி நிதிநிலை அறிக்கை வழங்கி அதன் மூலம் பல்வேறு மானிய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு வழங்க உத்தரவிட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் தற்போது வேளாண்மைத்துறையின் மூலம் ஆண்டுதோறும் விவசாயிகள் பயன்பெற்றிடும் வகையில் விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

கருத்தரங்கம் நிகழ்ச்சியில் விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வேளாண் பணிகளை மேற்கொள்ளுதல் வேளாண் பணிகளுக்கு தேவையான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் பல்வேறு வகையான பழ வகை கன்றுகள், தென்னை கன்றுகள் மானிய திட்டத்தில் வழங்குவது குறித்தும் அதேபோல் பயிரிடும் முறை தண்ணீர் பாசன முறை குறித்தும் கருத்தரங்கில் எடுத்துரைக்கப்படுகின்றன. மேலும் வேளா ண்மை துறையுடன் ஒருங்கிணைந்து வேளாண்மை பொறியியல் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையின் மூலம் மானியத் திட்டத்தில் பயிற்சியுடன் உபகரணங்கள் வழங்கப்படுவது. குறிப்பாக வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் டிராக்டர், பவர் டில்லர், களை எடுக்கும் கருவி, நெல் அறுவடை இயந்திரம் தொழில்நுட்பத்துடன் கூடிய உழவு இயந்திரங்கள் உள்ளிட்ட இயந்திரங்கள் குறைந்த கட்டணத்தில் வாடகை வழங்கப்படுகிறது.

அதே போல் தோட்டக்கலைத்துறையின் மூலம் 50 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை மானிய திட்டத்தில் பல்வேறு வகையான பழ கன்றுகள், தென்னை உள்ளிட்ட கன்றுகள் வழங்குவதுடன் சொட்டுநீர் பாசன உபகரணங்கள் மற்றும் இயற்கை உபகரணங்கள் வழங்கப்படுகிறது. விவசாயிகள் இது போன்ற கருத்தரங்கம் நிகழ்ச்சியில் பங்கேற்று பயன்பெற வேண்டும். இவ்வாறு பேசினார். நிகழ்ச்சியில், வேளாண்மைத்துறை துணை இயக்குநர்கள் ராஜேந்திரன், வாசுகி, அமர்லால், ஆறுமுகம், மல்லிகா, வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் முத்துக்குமார், விதை ஆய்வு துணை இயக்குநர் இபுராம்சா, வேளாண் உதவி இயக்குநர் ராஜலட்சுமி, வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் வள்ளல் கண்ணன், வேளாண் வணிக துணை இயக்குநர் கோபாலகிருஷ்ணன், விதைச்சான்றளிப்பு துறை உதவி இயக்குநர் சிவகாமி, முன்னோடி விவசாயி நாகலிங்கம் மற்றும் அரசு அலுவலர்கள் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருமலைக்கேணியில் சஷ்டி பூஜை கோலாகலம்



**நத்தம், ஆக. 15-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆடிமாத தேய்பிறை சஷ்டி பூஜை விழா நடந்தது. இதையொட்டி முருக பெருமானுக்கு பால்,பழம்,பன்னீர், விபூதி,சந்தனம், புஷ்பம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், சிறப்பு அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.மேலும் அருகிலுள்ள காமாட்சி மவுன குருசாமி மடத்திலும் சிறப்பு பூஜைகள் நடந்தது.

இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். இதை போலவே நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள் பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும், குட்டூர் உண்ணாமுலை அம்பாள் கோவிலில் உள்ள முருகப்பெருமான் சன்னதியிலும் சஷ்டியையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## பொது மருத்துவ மாதிரி சேகரிப்பு மையம்: கலெக்டர் சுகபுத்ரா திறந்து வைத்தார்



**விருதுநகர், ஆக. 15-**

விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கிருஷ்ணன் கோவில் கலசலிங்கம் மற்றும் ஆனந்தம் அம்மாள் அறக்கட்டளை இணைந்து அமைக்கப்பட்டுள்ள பொது மருத்துவ மாதிரி சேகரிப்பு மற்றும் அறிக்கை மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்த மையம் மூலம் பொது மருத்துவ சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு பரிசோதனை செய்வதற்கான மாதிரிகள் இங்கு சேகரிக்கப்பட்டு, அதற்கான பரிசோதனை அறிக்கைகளும் இங்கே வழங்கப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அனைத்து வகையான நோயாளிகள் பரிசோதனை மாதிரிகள் வழங்குவதற்காக ஆய்வகத்திற்கு செல்வதை தவிர்த்து, இங்கு வழங்குவதன் மூலம் கூட்டம் நெரிசல் இல்லாமலும், நோய் தொற்று பரவும் அபாயம் இல்லாமலும் இருக்கும்.

அதன்படி, இந்த பொது மருத்துவ மாதிரி சேகரிப்பு மற்றும் அறிக்கை மையத்தினை கலசலிங்கம் பல்கலைக்கழக வேந்தர் ஸ்ரீதர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா, பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் ஜெயசிங், மாவட்ட சுகாதார அலுவலர் யசோதாமணி உட்பட அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தேர்தல் ஆணையம் பா.ஜ.க.வின் துணை அமைப்பாக திகழ்கிறது

### விருதுநகர் எம்.பி. மாணிக்கம் தாகூர் குற்றச்சாட்டு



**திருமங்கலம், ஆக. 15-**

மதுரை மாவட்டம் பெருங்குடியில் விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள நியாய விலைகடை கட்டுமான பணிகளுக்கான பூமி பூஜை விழா விருதுநகர் எம்.பி மாணிக்கம் தாகூர் தலைமையில் நேற்று நடைபெற்றது.புதிய நியாய விலைக்கடை கட்டுமான பணிகளை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில்: வாக்கு திருட்டு சம்பவம் ஆர்.எஸ்.எஸ்-ன் துணையோடு நடைபெறுகிறது. இதனை கண்டித்து வருகிற 14-ம் தேதி பீகார் மாநிலத்தில் ராகுல் காந்தி வாக்காளர் உரிமை யாத்திரையை தொடங்குகிறார். 17 நாட்கள் இந்த யாத்திரை நடக்க இருக்கிறது. இந்தியா கூட்டணியின் 12 சதவீத வாக்குகளை டெலிட் செய்து விட்டு பிகாரில் தேர்தல் நடத்துவது ஜனநாயக விரோதமானது. எங்கெல்லாம் பாஜக தூங்கிய நிலையில் உள்ளதோ அங்கெல்லாம் இது போன்ற பிராடுத்தனத்தை பாஜக செய்கிறது. தேர்தல் ஆணையம் பா.ஜ.க.வின் துணை அமைப்பாக செயல்படுகிறது. தற்போது நயினார் நாகேந்திரன் பா.ஜ.க தலைமைக்கு சப்பை கட்டு கட்டுவதாக நினைத்து தமிழக வாக்காளர்களின் உரிமையை பறிக்கப் போகிறார். வட மாநிலத்தவர்கள் ஒன்னு வாங்கினால் ஐந்து ப்ரீ என்பது போல் ஓட்டு போடப் போகிறார்கள். இது மிகப்பெரிய ஆபத்தை உருவாக்க போது இது தெரியாமல் நயினார் நாகேந்திரன் பேசுவது வருத்தத்தை அளிக்கிறது.

தமிழக ஆளுநர் தொடர்ந்து தமிழகத்திற்கு எதிரான முடிவு எடுப்பதால் காங்கிரசார் தேநீர் விருந்தை நிராகரித்துள்ளனர். தூய்மைப் பணியாளர்கள் கைது செய்யப்பட்டது என்னைப் பொறுத்தவரை வருத்தமளிக்கிறது.அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உழைக்கின்ற மக்களின் ஜனநாயக உரிமைகளை காக்க வேண்டியது அரசு அதிகாரிகளின் கடமையாகும் என்று தெரிவித்தார். அப்போது கட்சி நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் மற்றும் திரளான பொதுமக்கள் உடனிருந்தனர்.

## பரமக்குடி லயன்ஸ் மெட்ரிக் பள்ளி மாணவர்கள் சாதனை

**பரமக்குடி, ஆக. 15-**

பரமக்குடி லயன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் குறு வட்டார அளவில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்று மாவட்ட அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். பரமக்குடியில் நடைபெற்ற குறு வட்டார அளவிலான போட்டிகளில் 19 வயது மாணவர்கள் பிரிவில் லயன்ஸ் மெட்ரிக் பள்ளி 12-ம் வகுப்பு மாணவன் அஸ்வின் 3000,1500 மீட்டர் ஓட்டப் போட்டியில் முதலிடமும், 800 மீட்டர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளார்.17 வயது மாணவர்கள் பிரிவில் 10-ம் வகுப்பு மாணவன் கீர்த்திவாசன் 100,110 மீட்டர் தடை தாண்டும் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடமும், ஒன்பதாம் வகுப்பு பள்ளி மாணவி ஹசானா தில்ரஸ் 100,200,400 மீட்டர் ஓட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்று தனிநபர் சாம்பியன் பட்டம் வென்றார். ஒன்பதாம் வகுப்பு பள்ளி மாணவி ஹன்சிகா ரிஃபா 80 மீட்டர் தடைதாண்டும் ஓட்டப்போட்டியில் முதலிடம், 200 மீட்டர் ஓட்டப்போட்டியில் இரண்டாம் இடமும், ஒன்பதாம் வகுப்பு பள்ளி மாணவி அவந்திக்கா 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இரண்டாம் இடமும் பெற்றனர்.

மேலும் 4 பேர் கொண்ட 100 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியில் ஒன்பதாம் வகுப்பு பள்ளி மாணவிகள் ஹசானா சில்ரஸ், ஸ்ரீ நதி, நாகூர் சஹானா, பத்தாம் வகுப்பு மாணவி தீப்ஸிகா ஆகிய மாணவிகள் கலந்து கொண்டு இரண்டாம் இடம் பெற்றனர். 11-ஆம் வகுப்பு பள்ளி மாணவி அனன்யா குண்டு எறிதல், வட்டு எறிதல் போட்டிகளில் முதலிடம் பெற்றார். வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளை பள்ளியின் கல்விக் குழு தலைவர் டாக்டர் இராமதாஸ், செயலாளர் பழனிச்சாமி,பொருளாளர் மோகன்தாஸ்,பள்ளியின் முதல்வர் சோபனாதேவி மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர். மேலும் பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர்கள் சரவணக்குமார், வளர்மதி, மரகதப்பிரியா ஆகியோரையும் பாராட்டினர்.

## சிவகங்கை மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் புகைப்பட கண்காட்சி



**சிவகங்கை, ஆக. 15-**

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாகிர் உசேன் கல்லூரி வளாகம் அருகில் இன்றையதினம் (13.8.2025) செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட கலெக்டர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் மாணவிகள் மற்றும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட மாணவிகள் மற்றும் பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என மாணவிகள் மற்றும் பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.

## நத்தத்தில் காவல்துறை தீவிர வாகனசோதனை



**நத்தம், ஆக. 15-**

நாடு முழுவதும் சுதந்திரதின விழா நாளை கொண்டாடப் பட உள்ள நிலையில் திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் போலீஸ்- இன்ஸ்பெக்டர் சிவராமகிருஷ்ணன், சப்-இன்ஸ் பெக்டர் கிருஷ்ணகுமார் உள்ளிட்ட போலீசார்கள் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். நத்தம் பஸ்நிலைய பகுதி, மூன்றுலாந்தர், அவுட்டர் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்ட நத்தம் போலீசார் கார், பைக் உள்ளிட்ட வாகனங்களை சோதனை செய்தும், பஸ்நிலைய பகுதியில் சந்தேகப் படும்படி நபர்கள் யாரேனும் இருக்கின்றனரா என்றும் விசாரணையில் ஈடுபட்டனர்.

## மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க இணையதள முன்பதிவு அவகாசம்

**விருதுநகர், ஆக. 15-**

முதல்வர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் - 2025 அனைத்து மாவட்ட மற்றும் மண்டல அளவில் வருகின்ற 22-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் என ஐந்து பிரிவுகளில் ஆண், பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், மாவட்ட அளவில் 25 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மண்டல அளவில் 7 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

தனி நபர் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரம் வழங்கப்படும். குழு போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.75 ஆயிரம், இரண்டாம் பரிசாக தலா ரூ.50 ஆயிரம், மூன்றாம் பரிசாக தலா ரூ.25 ஆயிரம் வழங்கப்படும். இப்போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் சிறப்பு மதிப்பெண்கள் மற்றும் சலுகைகள் பெற இயலும். எனவே முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் அனைவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான https://cmtrophy.sdat.in/https://sdat.tn.gov.in வாயிலாக 16.8.2025 க்குள் முன்பதிவு செய்து தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதுவரை முன்பதிவில் கிடைக்கப்பெற்ற வரவேற்பினை தொடர்ந்து, பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என அனைத்து பிரிவினரின் வேண்டுகோளுக்கு இணங்க மற்றும் அனைத்து தரப்பு மக்கள் பெருந்திரளாக பங்கேற்கும் வகையில் இணையதள முன்பதிவு செய்திட கால அவகாசம் 20.08.2025 இரவு 08.00 மணி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

மாணாக்கர்கள் தாங்களாகவோ, தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாவட்ட அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம். ஆடுகளம் தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 9514 000 777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## மேலூரில் த.வெ.க சார்பில் பொதுமக்களுக்கு அன்னதானம்




**மேலூர், ஆக. 15-**

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க மாநில தலைவர் புஸ்ஸி ஆனந்த் வழிகாட்டுதலின் படி மாவட்ட செயலாளர்கள் விஜய் அன்பன் கல்லானை, விஷால் கிருஷ்ணா ஆலோசனையின் பேரில் மதுரை வடக்கு மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதி சார்பில் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் சார்பாக 6 ஆம் ஆண்டாக மேலூர் நாகம்மாள் கோவிலின் 61 ம் ஆண்டு முளைப்பாரி உற்சவ விழாவை முன்னிட்டு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு சக்கரை பொங்கல், லெமன் சாதம், புளி சாதம் வழங்கப்பட்டது.

அன்னதானத்தை புறநகர் வடக்கு மாவட்ட அமைப்பாளர் பால்பாண்டி, இணை அமைப்பாளர் எல்.என். கோபாலகிருஷ்ணன், துணை அமைப்பாளர் தளபதி, பொருளாளர் மணிமாறன், துணைச்செயலாளர் தினகரன் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் கத்திசா, சங்கீதா, நகர் மற்றும் ஒன்றிய தமிழக வெற்றிகழக நிர்வாகிகள் ஆகியோர் பொதுமக்களுக்கு வழங்கினர்.

## நத்தத்தில் டிரான்ஸ்பார்மர் வெடித்து விபத்து: பதற்றம்


**நத்தம், ஆக. 15-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் தாலுகா அலுவலகத்திற்கு பின்புறம் டிரான்ஸ்பார்மர் ஒன்று உள்ளது. இந்த டிரான்ஸ்பார்மர் நேற்று மாலை திடீரென வெடித்து தீ பிடித்து எரிய தொடங்கியது. மேலும் அந்த பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது. இதைப்பார்த்த அக்கம் பக்கத்தினர் உடனடியாக தண்ணீரை ஊற்றி தீயை அணைத்தனர். தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த மின்வாரியத்தினர் மின் சப்ளையை நிறுத்தி பழுதை சரி செய்தனர்.

## திருமங்கலம்: கிளை நூலகத்தில் நூலகர் தின விழா

**திருமங்கலம், ஆக. 15-**

திருமங்கலம் கிளை நூலகத்தின் சார்பில் நூலக தந்தை எஸ்.ஆர்.ரங்கநாதன் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நூலகர் தின விழா சிறப்பாக கொண்டாடப் பட்டது.இவ்விழாவில் திருமங்கலம் நகராட்சி துணை தலைவர் ஆதவன் அதியமான் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திருமங்கலம், மற்றும் கள்ளிக்குடி பகுதிகளில் பணி புரிந்து வரும் நூலக பணியாளர்களுக்கு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற நூலக பணியாளர்களுக்கு பரிசு வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்வில் திருமங்கலம் வாசகர் வட்ட நிர்வாகிகள் பிரசன்னா முருகன், இருளப்பன்,சக்கையா, திருமங்கலம் தென்றல் அரிமா சங்க நிர்வாகிகள் தலைவர் இராஜ பிரபாகரன், செயலாளர் குழந்தை வேல்,பொருளாளர் குட்டி (எ) ஞானசீலன்,முன்னாள் மாவட்ட நூலக அலுவலர் த.இளங்கோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவின் நிறைவில் நூலகர் சு.வே.மலர்விழி நன்றி தெரிவித்தார்.



தலைமைச்செயலகத்தில், அரசு ஊழியர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக்காப்பீடு உள்ளிட்ட வங்கி சலுகைகளை கட்டணமின்றி வழங்கிட 7 முன்னோடி வங்கிகளுடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டதன் அடிப்படையில், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் கனரா வங்கி ஆகிய வங்கிகளால் வழங்கப்பட்ட, விபத்து மற்றும் இயற்கை மரணமடைந்த 5 அரசு ஊழியர்களின் குடும்பத்தினருக்கான காசோலைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இந்நிகழ்வில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அரசு உயர் அலுவர்கள் கலந்து கொண்டனர்.



அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான, எடப்பாடி கே. பழனிசாமி தேர்தல் சுற்றுப்பயணத்தின் 30-ஆம் நாளான நேற்று திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி மலை, கொட்டையூர் மலைவாழ் மக்களுடன் கலயதுரையாடினார். இந்நிகழ்வின்போது, முன்னாள் மத்திய அமைச்சர் டாக்டர் மு. தம்பிதுரை, முன்னாள் அமைச்சருமான வீரமணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## சாலைகள் சீரமைக்கப்படும்:
# ஏலகிரி மலைவாழ் மக்களிடம் எடப்பாடி பழனிசாமி வாக்குறுதி

**ஏலகிரி, ஆக. 15-**

தமிழகத்தில் மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் ஏலகிரியில் பழுதடைந்த அனைத்து சாலைகளும் சீரமைக்கப்படும். அம்மா மினி கிளினிக் இங்கு திறக்கப்படும்'' என அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மலைவாழ் மக்களிடம் வாக்குறுதி அளித்தார்.

அ.தி.மு.க. சார்பில் 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பிரச்சார பேரணியை அக்கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி கடந்த மாதம் தொடங்கி சட்டப்பேரவை தொகுதி வாரியாக மக்களை நேரில் சந்தித்து அவர்களது குறைகளை கேட்டறிந்தும், மனுக்களாக பெற்று பொதுமக்கள் மத்தியில் உரையாற்றி வருகிறார்.

அதன்படி, திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள 4 சட்டப்பேரவை தொகுதிகளில் 3 தொகுதிகளில் நேற்று முன்தினம் பரப்புரை மேற்கொண்ட எடப்பாடி பழனிசாமி நேற்று ஏலகிரி மலைக்கு சென்றார். அங்கு கொட்டாவூர் மலைப் பகுதியில் எடப்பாடி பழனிசாமிக்கு மலைவாழ் மக்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். அவர்களுடன் எடப்பாடி பழனிசாமி கலந்துரையாடல் நடத்தினார். இதனைத் தொடர்ந்து திறந்த வேனில் எடப்பாடி பழனிசாமி பேசியது: ''ஏலகிரி மலையில் வசித்து வரும் மலைவாழ் மக்களை சந்திக்கின்ற வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சியளிக்கிறது.

ஏலகிரி மலையை பொறுத்தவரை தமிழகத்தில் உள்ள பிரபலமான சுற்றுலா தளங்களில் ஒன்றாகும். இந்த பகுதியை மேலும் வளர அ.தி.மு.க. அரசு மீண்டும் உங்களால் தேர்ந்தெடுக்கும் போது இந்த ஏலகிரி மலையானது மிகச் சிறந்த சுற்றுலா தளமாக உருவாக்கவும், இங்கு அனைத்து வசதிகளுடன் கூடிய பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைய சுற்றுலா தளமாக ஏலகிரி உருவாக்கப்படும். ஏலகிரி மலையில் மக்களை சந்தித்து கலந்துரையாடியபோது இந்தப் பகுதியில் சில கோரிக்கைகள் மலைவாழ் மக்கள் என்னிடம் முன் வைத்துள்ளனர். ஏலகிரி மலை ஊராட்சியில் 14 குக்கிராமங்களில் பல இடங்களில் பல ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சாலைகள் தற்போது சிதலமடைந்து குண்டும், குழியுமாக இருப்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினர்.

அ.தி.மு.க. ஆட்சி வந்த பிறகு ஏலகிரி மலையில் பழுதடைந்த அனைத்து சாலைகளும் புதிய தார்ச்சாலையாக மாற்றப்படும். மலைவாழ் மக்களின் கோரிக்கைகள் அனைத்தும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு நிறைவேற்றி தரப்படும். அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகம் முழுவதும் 2 ஆயிரம் அம்மா மினி கிளினிக் திறக்கப்பட்டது. அதை திமுக அரசு மூடியது. மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த உடன் மாநிலம் முழுவதும் 4 ஆயிரம் அம்மா மினி கிளினிக் திறப்படும். அதில் ஏலகிரி மலையிலும் அம்மா மினி கிளினிக் திறக்கப்படும் என்று பழனிச்சாமி பேசினார். இந்நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி, எம்.பி. தம்பிதுரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து உலகின் 6 முன்னணி நாடுகளின் துணை தூதர்களுடன் நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் சென்னைக்கான அமெரிக்கா துணைத்தூதர் கிறிஸ்டோபர் டபிள்யூ. ஹாட்ஜஸ், பிரிட்டன் துணைத் தூதர் ஹலிமா ஹாலந்த், ஆஸ்திரேலியா துணைத்தூதர் சிலாய் ஜாக்கி, ஜெர்மன் துணைத்தூதர் மைக்கேல் ஹாஸ்பர், பிரான்ஸ் துணைத்தூதர் கிறிஸ்டோஃப் பிரமௌல்லே, சிங்கப்பூர் துணைத்தூதர் எட்கர் பாங், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரசிகர் கொலை வழக்கில் ஜாமீன் ரத்து:
# கன்னட நடிகர் தர்ஷன் கைது

**பெங்களூரு, ஆக. 15-**

நடிகை பவித்ரா கவுடாவை சீண்டிய ரசிகரை கொலை செய்த வழக்கில், நடிகர் தர்ஷன் ஜாமீன் ரத்து செய்யப்பட்ட நிலையில் பெங்களூருவில் கைது செய்யப்பட்டார்.

கன்னட திரையுலகில் பிரபல நடிகராக இருந்து வருபவர் தர்ஷன். இவர், சித்ரதுர்காவை சேர்ந்த ரேணுகாசாமி கொலை வழக்கில் பெங்களூரு காமாட்சி பாளையா போலீசாரால் கடந்த ஆண்டு (2024) ஜூன் மாதம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் நடிகர் தர்ஷனுக்கு கர்நாடக ஐகோர்ட்டு ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது. இதனால் அவர் சிறையில் இருந்து வெளியே வந்தார். தர்ஷன் போன்று, அவரது தோழியும், நடிகையுமான பவித்ரா கவுடாவுக்கும் இந்த வழக்கில் ஐகோர்ட்டு ஜாமீன் வழங்கி இருந்தது.



ரேணுகாசாமி கொலை வழக்கில் தர்ஷன், பவித்ரா கவுடா உள்பட 7 பேருக்கு ஐகோர்ட்டு வழங்கிய ஜாமீனை ரத்து செய்ய கோரி சுப்ரீம் கோர்ட்டில் கர்நாடக அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. அந்த மனு மீதான விசாரணை ஜூலை மாதம் நிறைவு பெற்று, தீர்ப்பு அறிவிக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், தர்ஷன் ஜாமீனுக்கு எதிரான கர்நாடக அரசின் மேல் முறையீட்டு மனு மீதான விசாரணை நேற்று நீதிபதிகள் ஜே பி பர்திவாலா மற்றும் ஆர் மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது. அதில், தர்ஷன் உட்பட 7 பேருக்கு வழங்கிய ஜாமீனை சுப்ரீம் கோர்ட்டு ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

மேலும் சட்டத்திற்கு மேலானவர்கள் யாரும் இல்லை என்று கூறிய சுப்ரீம் கோர்ட்டு, ஐகோர்ட்டின் உத்தரவு இயந்திரத்தனமாக உள்ளது, ஜாமீன் வழங்கப்பட்டு இருப்பது விசாரணையில் தாக்கத்தை ஏற்படுத்தும், சாட்சிகளும் மிரட்டப்படக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நடிகை பவித்ரா கவுடாவுக்கு ஆபாசமான செய்திகளை அனுப்பிய ரசிகரை கொலை செய்த வழக்கில் ஜாமீன் ரத்து செய்யப்பட்ட நிலையில் நடிகர் தர்ஷனை பெங்களூருவில் போலீசார் அதிரடியாக கைது செய்தனர். சிறையில் அவர்களுக்கு சிறப்பு சலுகை கூடாது எனவும் உச்ச நீதிமன்றம் எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



சென்னை, தேனாம்பேட்டையில் அப்பல்லோ ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் அதிநவீன கேத் லேபை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்து பார்வையிட்டார்.



தலைமைச்செயலகத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தலைமையில் பள்ளிக் கல்வித்துறை சார்ந்த சட்டப் பேரவை அறிவிப்புகள், திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் பள்ளிக்கல்வித் துறையின் எதிர்கால இலக்குகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து மாநகர் மாவட்ட மத்திய 7-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் அதன் பகுதி செயலாளர் ஆர்.சக்திவிநாயகர்பாண்டியன் தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் மகளிரணி செயலாளர் பா.வளர்மதி, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, வில்லாபுரம் ராஜா, சக்திமோகன்,வி.பி.ஆர்.செல்வகுமார், பேராசிரியர் ஜெயபால், ஒட்டுரணி திருமுருகன், பி.ஆர்.சி.மகாலிங்கம், மார்க்கெட் செந்தில்குமார், பிஆர்சி.ராஜாங்கம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.